தரம் 5 - 11 வரை


எண்: 06 எழுத்து: 10
ஒக்டோபர் 2012

PUBLIC LIBRARY
JAFFNA
09 OCT 2012

# AHARAM அகரம்

www.aharam.lk

## முஹம்மத் صلى الله عليه وسلم முழுமையான முன்மாதிரி



## ஆசிரியர்கள்

என்றும்
எல்லோராலும்
மதிப்பளிக்கப்பட வேண்டியவர்கள்

Des: Sinan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

40/-

# அகிலத்தாரின் அருட்கொடை



ஒழுக்கம் என்பது மனிதனுடைய வாழ்க்கையின் அச்சாணி. பண்பாடு அவனது வாழ்வின் அணிகலன். நாகரிகம் மனிதனுக்கு பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக நாகரிகம் அதனைக் கற்றுக் கொடுக்கத் தவறிவிட்டது. எனவே, அந்த நாகரிகத்தை பின்பற்றுவோரினதும் ஒழுக்கமும் பண்பாடும் தவறிவிட்டன.

இஸ்லாம் இந்த உலகத்தை ஒழுக்கத்தாலும் பண்பாட்டாலும் போஷித்து வளர்த்தது. ஒரு குழந்தை எவ்வாறு நல்லொழுக்கமுள்ள பிள்ளையாக தாய் தந்தையரால் வளர்க்கப்பட வேண்டும்; வளர்ந்து வருகின்றபோது பிள்ளை எவ்வாறு ஒழுக்கமும் பண்பாடும் நிறைந்த பிள்ளையாக வாழப் பழக வேண்டும்; அவற்றை எவ்வாறு கற்றுக் கொடுக்க வேண்டும்; சூழல் எவ்வாறு மனிதனது ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் கட்டிக் காப்பதற்காக கட்டமைக்கப்பட வேண்டும். தனது ஒழுக்கத்தைப் பாழ்படுத்தி சின்னாபின்னமாக்கி சிதை வடையச் செய்கின்ற ஆண்-பெண் உறவு எவ்வாறு அழகாக அமைய வேண்டும்; ஒழுக்க வாழ்வின் உறைவிடமான திருமணம் எவ்வாறு நிகழ வேண்டும் என்பதையெல்லாம் அண்ணலார் அழகிய வழிகாட்டல் மூலம் எமக்கு காட்டித் தந்தார்கள்.

அண்ணலார் ஒழுக்கத்தை வெறுமனே போதித்த ஒருவரல்ல. ஒழுக்கசீலராக வாழ்ந்து பண்பாட்டின் சிகரமாகத் திகழ்ந்தவர்கள். அண்ணலாரின் பண்பாடுகள் முஸ்லிம்களால் மட்டுமல்ல, முஸ்லிமல்லாதவர்களாலும் புகழப்பட்டவை. நாம் எம் உயிரிலும் மேலாக நேசிக்கும் அண்ணலாரின் மீது அன்பு கொள்வோம்! அன்னாரின் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் நாமும் எம் வாழ்வில் கடைபிடிப்போம்; ஜெயம்பெறுவோம்!

www.aharam.lk

facebook இல் Like செய்யுங்கள்...

www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அகரம்

எண்: 06 ஒக்டோபர், 2012 எழுத்து: 10



**பிரதம ஆசிரியர்**
ஏ.ரி.எம். நௌபல்

**ஆலோசனைக் குழு**
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

**ஆசிரியர்**
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

**உதவி ஆசிரியர்**
ஜே.எம். அஸீம் (நளீமி)

**தளக் கோலம்**
எம்.ஐ.எம். ஹரீஸ்




**சந்தா விபரம்**
**தனிப் பிரதி 40 /-**
**1 வருட சந்தா 700 /-**
**6 மாத சந்தா 350 /-**



தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி,
கொழும்பு – 09.
தொ.பே: 011 268 9324, 011 720 6575
பெக்ஸ்: 011 2686030
**Email: *aharamipc@gmail.com***
***www.facebook.com/aharamJmf***


## உள்ளே...




**ஆசிரியர்கள்** என்றும் எப்போதும் எல்லோராலும் மதிப்பளிக்கப்பட வேண்டியவர்கள் 32



15

நோயெதிர்ப்பைத் தூண்டும் தாய்ப்பால் 06


முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்): முழுமையான முன்மாதிரி


உள்ளார்ந்த ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளுங்கள் 21



09



38


**பாடத்திட்டம்**


| | | | |
|---|---|---|---|
| வரலாறு | 18 | தமிழ் | 27 |
| விஞ்ஞானம் | 29 | புலமைப் பரிசில் | 39 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம்மை அறிக; நன்மை பெறுக

புதிய முயற்சிகளோடு புத்தாக்கப் பணிகளில் நீங்கள் ஈடுபாடு கொண்டிருக்கும் பொழுதொன்றில் அகரம் உங்கள் கரம் தவழ வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த இதழில் கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சை தொடர்பான முன்னேற்பாடு குறித்து சில வழிகாட்டல்களைத் தந்திருந்தோம். பயனீட்டியிருப்பீர்கள் என்பதுதான் எமது நம்பிக்கை.

அன்பின் மாணவர்களே! அல்லாஹ் எம்மைப் பல்வேறு ஆற்றல், திறன் உடையவர்களாகவே படைத்திருக்கின்றான். அத்திறனை இனங்கண்டு கொள்வதும் அதற்காக முழு மனதோடு முயற்சிப்பதும் வெற்றிக்கு வழியாகும். தன்னையறிந்து தன் திறனையும் ஆளுமையையும் வளர்த்துக் கொண்டிருக்கின்ற ஒரு மாணவ சகோதரனைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.

அவர் ஓர் ஏழைக் குடும்பத்துப் பிள்ளை. பாடசாலைக் காலத்தில் விளையாட்டுத் துறை செயற்பாடுகளில் ஆர்வம் காட்டியவர். பாடப் புத்தகங்களைப் படித்து பரீட்சை எழுதி திருப்தியான பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளவில்லை. க.பொ.த. (சா/த) பரீட்சையையும் எழுதினார். ஆனால் உயர்தரத்தில் கற்பதற்குரிய தகைமைகளைப் பெறத் தவறிவிட்டார். அப்படித் தவறியது அவரது வாழ்வின் திருப்புமுனையாகவே அமைந்து விட்டது.

யோசித்தார்! உயர்தரம் கற்க முடியாது. வேறு கற்பதற்கு என்ன இருக்கிறது என்று தேடினார். எதைக் கற்பதானாலும் பொருளாதாரத்தின் தேவை இருக்கிறதே என்பது அவருக்கு தலையிடியைக் கொடுத்தது. இறுதியாக அருகிலுள்ள 'தொழில் பயிற்சி வழிகாட்டல் மத்திய நிலையத்தில்' இயந்திரவியல் (Automobile) துறையைக் கற்றுப் பயிற்சி பெறுவது எனத் தீர்மானித்தார்.

இரண்டு வருடகால அப்பயிற்சிநெறியைத் தொடர்வதில் பொருளாதார ரீதியான நெருக்கடிகளை அவர் சந்தித்தார். அதற்குப் பரிகாரம் தேடும் வகையில் விடுமுறை நாட்களிலும் ஓய்வு நேரங்களிலும் கூலித் தொழில்களில் ஈடுபட்டார். ஒருவாறு சிறந்த முறையில் இத்துறையில் தனது பயிற்சி நெறியை நிறைவு செய்து கொண்டார். தொடர்ந்தும் குறித்த துறையில் மேலதிகப் பயிற்சிகளைப் பெறுவதற்கு அவருக்கு பயிற்சி வழங்கிய நிறுவனம் ஏற்பாடுகளை செய்து கொடுத்தது.

பின்னர், தனது துறையில் மேலதிகப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை விமானப் படை பயிற்சிப் பட்டறையில் பெற்றுக் கொண்டார். தற்போது ஜப்பானின் உயர் வாகன இறக்குமதி கம்பனியில் இயந்திரவியல் தொழிநுட்பவியலாளராகக் கடமை புரிகின்றார். வெளிநாட்டுக் கம்பனிகளிலும் உயர்ந்த சம்பளத்தில் வேலை வாய்ப்புகள் வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவருக்கு தற்போது வயது 20 அல்லது 21 மட்டும்தான்!

தன் திறனை இனங்காண்பதும் சவால்கள் பிரச்சினைகளை எதிர்கொண்டு தொடர்ந்தேர்ச்சியாக முயற்சிப்பதும்தான் எமது வாழ்வுக்கு வெற்றியளிக்கும். இறையுணர்வும் அவன் பக்கமே சார்ந்து வாழ்வதும் அவன் எம்மிடம் எதிர்பார்ப்பதை நிறைவேற்றுவதும் எந்நிலையிலும் நாம் புறக்கணித்து ஒதுக்கிவிடும் அம்சம் அல்ல என்பதையும் அழுத்திச் சொல்லத் துணிகின்றோம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழும் அற்புதம் அல்குர்ஆன்

# அல்குர்ஆன் கூறும் கதைகள்

அபூ ஹானிம்

சென்ற இதழின் தொடர்...

*நபி ஹூத்* (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தம் மக்களை அல்லாஹ்வின் வழிகாட்டலின்பால் அழைத்தார்கள். அவர்கள் வணங்கி வழிபட்டுக் கொண்டிருந்த தெய்வங்கள் வெறும் கற்களே என்பதை உணர்த்தினார்கள். அவர்களைப் பார்த்து "சிலைகளை நீங்களே செதுக்குகிறீர்கள்; பின்னர் வணங்குகிறீர்கள். அதனிடமே தஞ்சமடைகிறீர்கள். அவை உங்களுக்கு ஏதேனும் பயனை அல்லது தீங்கை ஏற்படுத்துகின்றனவா? அல்லாஹ்வின் பால் நீங்கள் தேவையற்றவர்களாகி விட்டீர்களா?" என வினவினார்கள்.

## ஆத் சமூகத்தின் சகோதரர்

# ஹூத் (அலைஹிஸ்ஸலாம்)

தனது சமூகத்தார் ஈமான் கொள்ள வேண்டும் என்பதுதான் ஹூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது எதிர்பார்ப்பு. அவர்கள் மீது கொண்ட அன்பும் பாசமும்தான் அவர்கள் நேர்வழி பெற வேண்டுமே என்பதற்காக எடுத்துக் கொண்ட முயற்சி. ஆனாலும் ஹூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது செய்தியைக் கேட்ட சமூகத்தின் முகம் கறுத்துவிட்டது. கண்களில் கோபக் கனல் பறந்தது. "நீர் ஏன் எம்மை இழிவுபடுத்துகிறீர்? அல்லாஹ்வை, அவனுக்கு இணையான தெய்வங்களை விட்டு விட்டு அவனை மட்டும் நாம் வணங்க வேண்டும் என எப்படி நீர் விரும்புவீர்? அல்லாஹ்வை நெருங்க வேண்டும்; அவனிடம் எமக்காக பரிந்து பேச வேண்டும் என்பதற்காகத்தானே இந்தக் கற்சிலைகளை நாம் வணங்குகின்றோம்" என நபி ஹூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களைப் பார்த்து அவர்கள் வெறுப்போடும் கோபத்தோடும் பதிலுரைத்தனர்.

மேலும் அவர்களை நோக்கி, "எவன் உங்களைப் படைத்தானோ, உங்களுக்கு வாழ்வாதாரம் வழங்குகின்றானோ, அவன்தான் உங்களுக்கு வாழ்வளித்தவன். அவன்தான் உங்களை மரணிக்கச் செய்வான். பூமியை வாழுமிடமாக்கித் தந்தவனும் அவனே, அதில் உங்களுக்காகவும் உங்கள் கால்நடைகளுக்காகவும் பயிர்களை முளைப்பிக்கச் செய்தவனும் அவனே! பலம்மிக்க உடலமைப்பைத் தந்தவனும் அவனே! அந்த ஏகனாகிய அல்லாஹ்வையே ஈமான் கொள்ளுங்கள். அவன் விடயத்தில் குருடர்களாகவும் கர்வம் பிடித்தவர்களாகவும் நீங்கள் நடந்து கொள்வதை எச்சரிக்கின்றேன். நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது சமூகத்தாருக்கு பீடித்த தண்டனை உங்களையும் பீடிக்கும். அவர்கள் வாழ்ந்து அழிந்த காலம் வெகு தொலைவு அல்ல" என ஹூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அறிவூட்டினார்கள்; அச்சமூட்டி எச்சரிக்கை செய்தார்கள்.

அதற்கு நபி ஹூத் "எனது சமூகமே! நிச்சயமாக அல்லாஹ் ஒருவன். அவன் இணை துணை அற்றவன். அவனே வணங்கி வழிபடத் தகுதியானவன். அவன் மிக மிக நெருக்கமானவன். அல்லாஹ்வைப் புறக்கணித்து விட்டு நீங்கள் வணங்கும் இச்சிலைகள், நீங்கள் கருதுவதுபோல அல்லாஹ்விடம் பரிந்துபேசவும் மாட்டா; அவனை நெருங்கச் செய்யவும் மாட்டா. மாற்றமாக அவனை விட்டு உங்களை தூரமாக்கும். மேலும் நீங்கள் விளங்கிக் கொள்வதாக நினைக்கும் நேரத்திலேயே அறியாமையின்பால் உங்களை இட்டுச் செல்லும்" என எடுத்துரைத்தார்கள்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஹஜ்ஜின் வரலாற்றுப் படிப்பினைகளைப் பெறுவோம்; செயற்படுவோம்!

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ الْعُمْرَةُ إِلَى الْعُمْرَةِ كَفَّارَةٌ لِمَا بَيْنَهُمَا وَالْحَجُّ الْمَبْرُورُ لَيْسَ لَهُ جَزَاءٌ إِلَّا الْجَنَّةُ (مُتَّفَقٌ عَلَيْهِ)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

"ஒரு உம்ரா, அடுத்த உம்ராவுக்கிடையில் உள்ள (பாவங்களுக்கு) பரிகாரமாகும். ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கான கூலி சுவர்க்கமேயன்றி வேறில்லை." (அல்புகாரி, முஸ்லிம்)

எமக்கு அல்லாஹ் அருளிய திருநாளான ஹஜ்ஜுப் பெருநாளை இன்னும் சில தினங்களில் அடையப் போகின்றோம் என்ற மகிழ்வுடன், வாழ்த்துக் கூறி ஹதீஸ் பூங்காவிற்குள் உங்களை அழைத்துச் செல்லலாம் என எண்ணுகிறேன்.

மாணவர்களே! இந்தப் பெருநாள் தினத்தில் நாமும் அனைவரையும் போல் வீண் விளையாட்டுக்களிலும் கேளிக்கைகளிலும் ஈடுபடுகின்றவர்களாக இருந்து விடக்கூடாது. மாறாக இஸ்லாம் எமக்கு வழிகாட்டியுள்ள ஒவ்வொரு செயற்பாட்டுக்குப் பின்னாலும் பொதிந்துள்ள அதன் தாத்பரியங்களை சுன்னாவின் ஒளியில் விளங்கி அதன் பயன்பாடுகளை உலகிலும் பூரணமாகப் பெற்று அதன் மூலம் மறுமையில் அல்லாஹ்வின் திருப்தியையும் சுவனத்தையும் பெற முயற்சிக்க வேண்டும்.

அந்த வகையில் ஹஜ்ஜுப் பெருநாள் தியாகங்கள் நிறைந்த திருநாளாகும். எனவேதான் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஹஜ்ஜுக்கு அல்லாஹ் சுவர்க்கத்தை வழங்குகின்றான் என மேலுள்ள ஹதீஸ் எமக்கு உணர்த்துகின்றது. இத்தகைய ஹஜ்ஜின் முடிவிலேயே நாம் பெருநாளைக் கொண்டாடுகிறோம்.

ஹஜ் கிரியைகளும் ஹஜ்ஜுப் பெருநாள் தினமும் எமக்குக் கற்றுத்தருகின்ற மிகப் பெரிய வாழ்வியல் பாடமே தியாகமும் அர்ப்பணமுமாகும். இதற்கு இரு பெரும் முன்மாதிரிகளை எமது ஸீறாவில் கண்டு கொள்ளலாம்.

முதலாவது, நபி இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தொடர்பானது. சகல வழிகளிலும் அவர் சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் உட்பட்டார். அவரது தந்தை, குடும்பம், அன்றைய மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் சக்திகள் அனைத்தும் அவரை எதிர்த்து நின்றன. அவர், அவர்கள் அனைவரையும் புறக்கணித்து விட்டார். எனவே, நெருப்பில் எறியப்பட்டார். காடு, மலைகள், பாலை, சோலைகள் என எங்கும் அலைந்து திரிந்தார். இறுதியில் தனது புதல்வரை அறுத்துப் பலியிடவும் துணிந்தார்.

இத்தகைய தியாகங்களை அவர் மேற்கொண்டமைக்கான ஒரே பின்னணி அல்லாஹ்வின் மீது அவருக்கிருந்த அளவற்ற பற்றாகும். அல்லாஹ்வும் உலகில் தனது நண்பனை தேர்ந்தெடுத்துக் கொள்வதற்காக அத்தனை சோதனைகளையும் இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது வாழ்வில் தொடர்ச்சியாக வழங்கிக் கொண்டேயிருந்தான். இறுதியில் தனது நண்பனைத் தேர்ந்தெடுத்து அவரது தியாகத்திற்கும் அர்ப்பணத்திற்கும் தகுந்த கண்ணியத்தையும் கூலியையும் வழங்கினான்.

(20ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உற்சாகப்படுத்தலும் உற்சாகம் அடைதலும்



**தைரியம்**, நம்பிக்கை, துணிவு, வீரம் என்பவற்றைப் புகட்டிய நபியவர்கள் ஸஹாபிகளை அவ்வப்போது உற்சாகமூட்டி ஆர்வமாக செயற்படத் தூண்டினார்கள். சோம்பேறித்தனத்திலிருந்தும் பொடுபோக்கிலிருந்தும் நபியவர்கள் அல்லாஹ் விடம் பாதுகாப்புத் தேடினார்கள். சோம்பல் களைந்து உற்சாகமாக செயற்படுவதே வெற்றிக்கு வழியாகும். இத்தகைய உற்சாகப்படுத்தல்கள் இக்கட்டான நேரங்களில் கஷ்டங்கள் மறந்து உற்சாகமாக செயற்பட ஸஹாபிக உறுதுணையாய் அமைந்தன.

மனிதன் எப்போதும் ஒரே மனோநிலையில் இருக்க மாட்டான். சிலபோது நம்பிக்கையோடும் சில சமயங்களில் நம்பிக்கையிழந்தும் சிலபோது உற்சாகத்துடனும் சில சமயம் உற்சாகமிழந்தும் சிலபோது ஆரோக்கியமாகவும் மற்றும் சிலபோது ஆரோக்கியமிழந்தும் காணப்படுவான். இத்தகைய வேறுபாடான மனோநிலையில் காணப்படும் அவனை நம்பிக்கையிழந்து காணப்படுகின்றபோது நம்பிக்கையூட்டவும் உற்சாகமிழக்கின்றபோது உற்சாகமூட்டவும் வேண்டிய தேவை ஏற்படு கின்றது.

பத்ர் யுத்தம் ஆரம்பித்தபோது நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முஸ்லிம் களுக்கு போர் புரிய ஆர்வமூட்டினார்கள். அவர் களை உற்சாகமூட்டியவர்களாகக் கூறினார்கள்:

"முஹம்மதின் உயிர் எவன் கைவசமுள்ளதோ அவன் மீது ஆணையாக! இன்றைய தினத்தில் போர் புரிந்து சகிப்புத்தன்மையயுடனும் நன்மையை நாடியும் புறமுதுகு காட்டாமல் எதிரிகளை எதிர்த்தவராக யார் கொலை செய்யப்படுகிறாரோ அவரை அல்லாஹ் சொர்க்கத்தில் நுழைவிப்பான். வானங்களையும் பூமிகளையும் அகலமாகக் கொண்ட சொர்க்கத்தின் பக்கம் விரைந்தோடுங்கள்."

இதனைக் கேட்ட உமைர் இப்னு அல்ஹுமாம் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் "ஆஹா! ஆஹா!" என்றார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "நீர் ஏன் ஆஹா! ஆஹா! என்று கூறுகிறீர்?" என்று கேட்க, அவர் "நான் தவறான எண்ணத்தில் கூறவில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் சொர்க்கவாசிகளில் ஒருவனாக ஆக வேண்டு மென்ற ஆசையில்தான் அவ்வாறு கூறினேன்" என்றார்.

அப்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், "ஆம்! நிச்சயமாக நீர் சொர்க்க வாசிகளில் ஒருவர்தான்" என்றார்கள்.

உடனே அவர் தன்னிடமிருந்த சில பேரீத்தம் பழங்களை எடுத்து சாப்பிடத் தொடங்கினார். பின்பு, "இந்தப் பேரீத்தம் பழங்களை சாப்பிடும் வரை நான் உயிர் வாழ்வதை நீண்ட ஒரு காலமாகக் கருதுகிறேன்" என்று கூறியவராக அந்தப் பேரீத்தம் பழங்களை எறிந்து விட்டு எதிரிகளுடன் போர் புரிந்து வீரமரணம் எய்தினார். (ஸஹீஹ் முஸ்லிம்)

இவ்வாறான உற்சாகப்படுத்தல்கள் அனைவ ருக்கும் அவ்வப்போது தேவைப்படுகின்றன. உற்சாகப்படுத்தல் தலைமைத்துவத்தின் ஒரு தகுதி யாகக்கூட காணப்படுகிறது. நபியவர்கள் ஸஹாபி களுக்கு சுவனத்தைக் கொண்டு உற்சாகமூட்டி னார்கள். இதனால் உற்சாகமடைந்த அவர்கள் அனைத்தையும் துறந்து, தூக்கியெறிந்துவிட்டு வெற்றியை நோக்கிப் பயணித்தார்கள்.

உற்சாகமூட்டல் மனிதனின் மனோநிலையை மாற்றும். அவனது இரத்தத்திற்கு வேகம் பாய்ச்சும். அவனை ஆர்வமாக செயற்பட வைக்கும். வெற்றியை நோக்கி அவனை அழைத்துச் செல்லும்.

மனிதன் உற்சாகமடைகின்றபோது அவனது செயற்பாடுகளின் வேகம் பன்மடங்காகும். அவனது சக்தியை மீறி அவன் செயற்படுவான். சாதனை களை நோக்கி அவன் பயணிப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயெதிர்ப்பைத் தூண்டும்



# தாய்ப்பால்

ஆலிப் அலி (இஸ்லாஹி) www.aliaalif.tk

“இவ்வேதம் உண்மையானது என்பதை அவர்களுக்கு விளக்குவதற்காக எமது அத்தாட்சிகளை உலகின் பல பாகங்களிலும் (ஏன்) அவர்களுக்குள்ளேயும் நாம் காண்பிக்கின்றோம்.” (41: 53)

அல்லாஹ்வின் எண்ணிலடங்கா அற்புதங்களுள் தாய்ப்பாலும் ஒன்று. தாய்ப்பால் கொண்டிருக்கும் அற்புதத்தைப் பார்த்து விஞ்ஞானிகளே வியக்கின்றனர். தாய்க்கும் சேய்க்கும் இடையில் பலமானதொரு அன்புப் பிணைப்பை ஏற்படுத்துவதில் தாய்ப்பால் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது. ஒரு குழந்தையின் ஆரோக்கியமான உடலியல் மற்றும் உளவியல் ரீதியான வளர்ச்சி, முதிர்ச்சிகளுக்கும் சிறு பருவத்தில் முறையாகத் தாய்ப்பால் பருகுவது இன்றியமையாததாகும்.

குழந்தைக்குப் பாலூட்டும் தாயின் மார்பிலிருந்து ஒரு நாளைக்கு 1 லீட்டர் முதல் 2 லீட்டர் வரை பால் சுரக்கின்றது. பால் சுரக்கும் பொறிமுறையானது மிகவும் அற்புதமானதோர் அம்சம். தாயின் மார்பகங்களில் குழந்தை வாய் வைக்கும் போது தாயின் மூளையில் உள்ள ப்ரோலெக்டின் (Prolactin) எனும் ஹோமோன் தூண்டப்படுகிறது. பின்னர் அந்த ஹோமோன் இரத்தத்தைப் பாலாக மாற்றுகிறது. ஒக்ஸிடோசின் (Oxytocin) எனும் மற்றொரு ஹோமோன் சுரப்பதனால் இரத்தமாக மாற்றப்பட்ட பால் மார்பகத்தில் உள்ள குழாய்கள் (Lactiferous ducts) வழியாக சுரக்கின்றது. சில போது குழந்தைக்குப் பாலூட்ட வேண்டும் என்ற ஆர்வம்கூட தாய்ப்பாலைச் சுரக்க வைக்கும்.

கருவறையில் மிகவும் பாதுகாப்பாக இருந்து வெளி உலகிற்கு வரும் குழந்தையின் நோய் எதிர்ப்பு மண்டலங்கள் முழுமையாக இயங்காது. இதனால் குழந்தை பல வழிகளிலும் நோய்த் தொற்றுக்குள்ளாக வாய்ப்புள்ளது. எனவே, அத்தகைய நோய்களுக்கான நோய் எதிர்ப்பு சக்தியை அல்லாஹ் தாய்ப்பாலில் வைத்திருக்கின்றான். தாயின் பாலில் உள்ள ‘இம்யுனோக்ளோபின் ஏ’ என்ற பொருள் குழந்தையிடம் நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்கின்றது.

சிறு பராயத்தில்தான் நோய்க்கிருமிகளை எதிர்த்துப் போராடும் அணுக்கள் உடலில் நன்கு உற்பத்தியாகின்றன. நோயெதிர்ப்பு அணுக்களை உற்பத்தியாக்கவே சிறுவயதில் நோய்த்தடுப்பு ஊசிகள் ஏற்றப்படுகின்றன. உண்மையில் அவ் ஊசிகளில் இருப்பது மருந்தல்ல. மாறாக, ஆயிரக் கணக்கான நோய்க் கிருமிகளே! இவற்றை உடலில் செலுத்தியதும் நோயை எதிர்த்துப் போராடும் உயிரணுக்கள் உருவாகி அவற்றைத் தாக்கி அழிப்பதோடு இறுதி வரை குறித்த வகை நோய்க்கிருமிகள் உடலில் நுழையும் போதெல்லாம் அவற்றை அழிக்கும் தொழிலில் அவை ஈடுபடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோன்று தாய்ப்பால் அருந்துவதனூடாகவும் ஆரம்பம் முதலே நோய் எதிர்ப்பு அணுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு விடுகின்றன. குழந்தைப் பருவத்தில் தாய்ப்பாலை வழங்காது புட்டிப்பாலை (பசுப்பால்) அருந்தச் செய்வதால் இத்தகைய பலன் கிடைப்பதில்லை.

குழந்தையின் மூளை வளர்ச்சிக்குத் தேவையான D.H.A (Docosa Hexaenoic Acid) மற்றும் A.R.A. (Arachidonic Acid) என்பனவும் காணப்படுகின்றன. குழந்தை பிறந்து மூன்று நாட்களில் சுரக்கும் தாய்ப்பால் 'கொலஸ்ட்ரம்' என்றழைக்கப்படுகின்றது. இது வெளிர் மஞ்சள் நிறத்தில் காணப்படும். இதில் அதிகமானளவு நோய் எதிர்ப்பு அணுக்களும் புரதச் சத்துக்களும் காணப்படும். மூன்றாம் நாளின் பின்பு குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான புரதம், மாச்சத்து, விட்டமின்கள், தாதுப்பொருட்கள் என்பன சரிவிகித அளவில் இருக்கும். இரண்டு வருடங்கள் பூர்த்தியாகுகையில் குழந்தைக்குத் தேவையான கொழுப்புச் சத்துக்கள் தாய்ப்பாலினூடாக செல்லும். எனவேதான், தாய்ப்பாலுக்கு இணையான உணவு எங்கும் இல்லை என்கிறோம்.

சுவீடனில் உள்ள லுண்ட் மற்றும் கோட்டன் பெர்க் பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் இணைந்து மேற்கொண்ட ஆய்வின் பின் கூறிய தாவது:

"தாய்ப்பாலில் இருக்கும் ஹேம்லெட் என்ற ஒருவகைப் பொருளானது நாற்பது வகையான புற்றுநோய்க் கலங்களை அழிக்கும் சக்தியைக் கொண்டுள்ளது."

அதேபோன்று குழந்தைப் பருவத்தில் தாய்ப் பால் பருகுவதால் ஒவ்வொமை நோய், நீரிழிவு நோய் போன்றவை பீடிக்கும் வீதமும் குறைகிறது. முறையாகத் தாய்ப்பால் பருகி வளரும் குழந்தைகள் மருத்துவமனைக்குச் செல்லும் தேவை 80% குறைகிறது.

தாய்ப்பாலில் புரதம், காபோஹைட்ரேட், கொழுப்பு, அமிலம் போன்ற ஊட்டச்சத்துக்களும் இரும்பு, கல்சியம், பொட்டாசியம், சோடியம் போன்ற தாதுப் பொருட்களும் விட்டமின்களும் நிறைந்து காணப்படுகின்றன.

குழந்தையின் மூளை வளர்ச்சிக்குத் தேவையான D.H.A (Docosa Hexaenoic Acid) மற்றும் A.R.A. (Arachidonic Acid) என்பனவும் காணப்படுகின்றன. குழந்தை பிறந்து மூன்று நாட்களில் சுரக்கும் தாய்ப்பால் 'கொலஸ்ட்ரம்' என்றழைக்கப்படு கின்றது. இது வெளிர் மஞ்சள் நிறத்தில் காணப் படும். இதில் அதிகமானளவு நோய் எதிர்ப்பு அணுக்களும் புரதச் சத்துக்களும் காணப்படும். மூன்றாம் நாளின் பின்பு குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான புரதம், மாச்சத்து, விட்டமின்கள், தாதுப் பொருட்கள் என்பன சரிவிகித அளவில் இருக்கும். இரண்டு வருடங்கள் பூர்த்தியாகுகையில் குழந்தைக்குத் தேவையான கொழுப்புச் சத்துக்கள் தாய்ப்பாலினூடாக செல்லும். எனவேதான், தாய்ப்பாலுக்கு இணையான உணவு எங்கும் இல்லை என்கிறோம்.

தாய்ப்பால் புகட்டப்படும்போது குழந்தையின் மூளைச் செல்கள் அதிவேகமாக வளர்ச்சி அடை கின்றதென யுனிசெப்பின் ஆய்வு தெரிவிக்கின்றது. எனவே, அவர்கள் எதிர்காலத்தில் அறிவுத்திறன் மிக்கவர்களாகவும் மற்றும் புத்திக்கூர்மை உடைய வர்களாகவும் இருப்பார்கள் என அவ் ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. அத்தோடு இதன் பிரதிபலனை ஐந்து, ஏழு, பதினொன்று மற்றும் பதின்நான்கு ஆகிய வயதுகளில் வாசிப்பு, எழுத்து, கணிதம் ஆகிய துறைகளில் கண்டுகொள்ளலாம் எனவும் அவ் வாய்வு கூறுகிறது.

இதனால்தான் முதல் இரண்டு வருடங்களில் குழந்தைகளுக்குக் கட்டாயம் தாய்ப்பாலை வழங்கவேண்டுமென வைத்தியர்கள் வலியுறுத்து கின்றனர். வல்லவன் அல்லாஹ் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் வழங்கவேண்டிய கால எல்லையைப் பற்றி அல்குர்ஆனில் பல இடங்களில் பின்வருமாறு கூறுகின்றான்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னும் (பால்குடி மறக்கடிக்கப்படுவது) இரண்டு வருடங்களிலாகும்" (லுக்மான்: 14), (அல்பகரா: 233)

இந்த ஆரம்ப இரண்டு வருடங்களிலும் பாலூட்டுவதானது குழந்தையின் உள, உடல் வளர்ச்சி மற்றும் விருத்திகளில் எவ்வளவு முக்கியம் வகிக்கின்றது என்பதை மேலே அவதானித்தோம்.

இஸ்லாமிய வரலாற்றில் நடைபெற்ற தாய்ப் பாலுடன் தொடர்பான இரண்டு வழக்கு விசாரணைச் சம்பவங்களை இங்கு ஞாபகிப்பதும் பயன் தரும்.

ஒரே சமயத்தில் இரண்டு பெண்மணிகள் ஆண் குழந்தை ஒன்றையும் பெண் குழந்தை ஒன்றையும் பிரசவித்தனர். பெண் குழந்தை இறக் கவே அதன் தாய் ஆண் குழந்தைதான் தன்னுடையது என்று வாக்குவாதப்பட்டாள். இரண்டு தாய்மாரும் விசாரணைக்காக அன்றிருந்த பிரபலமான நீதிபதியிடம் அழைத்து வரப்பட்டனர். அவர் இருவருடைய தாய்ப் பால்களிலிருந்தும் சிறிதளவு எடுத்து இரண்டையும் நிறுத்துப் பார்த்துவிட்டு, நிறை கூடிய பால் யாருடையதோ ஆண் குழந்தை அவருடையதே எனத் தீர்ப்பு வழங்கினார்.

பொதுவாக, ஆரோக்கியமான குழந்தைப் பேறு என்பது ஒன்பது அல்லது பத்து மாதங்களில் குழந்தை பெற்றெடுப்பதாகும். ஆரம்ப காலங்களில் ஆகக் குறைந்தது ஏழு மாதங்களுக்குப் பின் குழந்தை பிறந்தால் மட்டுமே அதனை வாழவைக்க முடியும் என்ற கருத்து இருந்து வந்தது. என்றாலும் ஒரு குழந்தை ஆறு மாதங்களிலும் பிறக்க முடியும் என்ற உண்மையை அல்குர்ஆன் மிக அழகாக கணித அடிப்படையில் நிறுவுகின்றது.

இவ்விடயத்தை மறுத்துவந்த பிரபல முளைய வியல பேராசிரியர் Dr. கீத் மூர் அவர்கள் கூட பேராசிரியர் அப்துல் கரீம் ஸைதான் அவர்கள் அல்குர்ஆனின் நிழலில் இதனைத் தெளிவுபடுத்தியதும் பல ஆராய்ச்சிகளின் பின் ஆச்சரியத்துடன் ஏற்றுக் கொண்டுள்ளார். அல்குர்ஆன் இதனை நிறுவும் பாங்கினைப் பாருங்கள்.

கர்ப்ப காலம் தொடர்பாகவும் குழந்தைக்குப் பாலூட்டும் காலம் தொடர்பாகவும் அல்குர்ஆனில் அநேக வசனங்களைக் காணலாம். அவற்றில் மிக முக்கியமான இரண்டு வசனங்களை இங்கு நோக்குவோம்.

1. "இன்னும் (பாலருந்துவது மறக்கடிக்கப்படுவது) இரண்டு வருடங்களிலாகும்." (லுக்மான்: 14)

2. "அவனைச் சுமப்பதும் பால் குடிக்கவைப்பதும் முப்பது மாதங்களாகும்." (அல்அஹ்காப்: 15)

இந்த இரண்டு வசனங்களிலும் இரண்டு வகையான தவணைகள் கூறப்பட்டுள்ளன. பால்குடி மறக்கடிக்கச் செய்வது இரண்டு வருடங்களில் என்றும் சிசுவைக் கருவில் சுமப்பதும் பின்னர் அதற்குப் பாலூட்டுவதும் முப்பது மாதங்கள் என்றும் வந்துள்ளன. இக்கால எண்ணிக்கைகளை நாம் மாத அடிப்படையில் கணக்கிட்டால் இரண்டு வருடங்கள் பாலூட்டுதல் என்பது 24 மாதங்களாகும். பாலூட்டுதல் 30 மாதங்கள் என்று ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக முப்பது மாதங்களில் 24 மாதங்கள் பாலூட்டுதல் என்றால் எஞ்சியிருக்கும் 6 மாதம் என்பது குழந்தையைக் கருவில் சுமக்கும் காலப்பகுதியாகும். (சுருக்கமாக: கருவில் சுமப்பது 6 மாதங்கள் + பாலூட்டுதல் 24 மாதங்கள் = 30 மாதங்கள்) ஆக ஒரு குழந்தையைப் பிரசவிப்பதற்குப் போதுமான ஆகக் குறைந்த காலம் ஆறு மாதங்கள் என்பதை இதிலிருந்து விளங்கலாம்.

இது ஒரு வரலாற்றுச் சம்பவத்துடன் தொடர்பு படுகின்றது. உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களது ஆட்சிக் காலம். ஒரு பெண் திருமணம் முடித்து ஆறு மாதங்களில் குழந்தையைப் பெற்று விடுகிறாள். அவ்வாறு அவள் வழமைக்கு மாறாக ஆறு மாதங்களில் குழந்தையொன்றைப் பிரசவித்தமைக்கான காரணம் அவள் திருமணத்திற்கு முன்பு தகாத உறவில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்ற சந்தேகத்தைக் கிளப்பிவிட்டது. எனவே, மக்கள் அப்பெண்ணுக்கு விபசாரத்திற்கான தண்டனை வழங்க வேண்டும் என்று கூறினர். இது தொடர்பாக உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களது அவையில் பேசப்பட்டுக் கொண்டிருக்கும்போது அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மேற் குறிப்பிட்ட அல்குர்ஆனிய வசனங்களை ஆதாரமாகக் காட்டி ஒரு பெண் ஆறு மாதங்களிலும் குழந்தையொன்றைப் பிரசவிக்க முடியும் என்ற உண்மையை நிரூபித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொது அறிவுத் துளிகள் சில

- ஜமேக்காவின் தலைநகரம் கிங்ஸ்டன் ஆகும்.
- இரைப்பையில் சமிபாடடையாத உணவுப் பொருட்கள் வெண்ணெய், பட்டர் என்பனவாகும்.
- இலங்கையின் தாவரவியல் பூங்காக்கள் பேராதெனிய, ஹக்களை, கம்பஹா என்பனவாகும்.
- உலகில் ஆகக் கூடுதலான மக்களால் பேசப்படும் மொழி சீன மொழி ஆகும்.
- புராதன காலத்தில் இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட வியாபாரப் பண்டங்கள் யானைத் தந்தம், இரத்தினக் கற்கள், முத்து, வாசனைத் திரவியங்கள் என்பன ஆகும்.
- வருடம் தோறும் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் நாடு சுவிட்சர்லாந்து ஆகும்.
- பழைமை வாய்ந்த செய்தி நிறுவனம் ரொய்ட்டர் ஆகும்.
- உலகில் மிகப் பழைமையான பாராளுமன்றம் உள்ள நாடு ஐஸ்லாந்து ஆகும்.
- படகு வடிவில் அமைந்துள்ள நாடு இத்தாலி ஆகும்.


*ஆர்.எம். ரிஸான், தரம்: 09*
*சிறாஜ் அரபுக் கல்லூரி, ஓட்டமாவடி*

# விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள்

| சாதனம் | விஞ்ஞானி | நாடு |
|---|---|---|
| தொலைபேசி | அலெக்சாண்டர் கிரகம்பெல் | அமெரிக்கா |
| மோட்டார் சைக்கிள் | டைம்லர் | ஜேர்மனி |
| மின்னல் இடி தாங்கி | பெஞ்சமின் பிராங்க்ளின் | அமெரிக்கா |
| சைக்கிள் | மாக்மில்லன் | ஸ்கொட்லாந்து |
| ஒட்சிசன் வாயு | ஜோசப் பிரீஸ்லி | ஸ்கொட்லாந்து |
| தடுப்பூசி மருந்து | ஜென்னர் | ஸ்கொட்லாந்து |
| குருதிச்சுற்றோட்டம் | வில்லியம் ஹார்வே | ஸ்கொட்லாந்து |
| டைனமைற் | அல்பேர்ட் நோபிள் | சுவீடன் |
| டைனமோ | மைக்கல் பரடே | இங்கிலாந்து |
| நீராவி இயந்திரம் | ஜேம்ஸ் வாற்று | இங்கிலாந்து |

*எம்.ஏ.எப். அஸ்கா, தரம்: 8*
*வெலம்பொடை மு.ம.வி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அறிந்து கொள்ளுங்கள்

சனத்தொகை குறைந்த நாடு
- வத்திக்கான்

ஆழமான ஏரி
- பைக்கல்

கூடிய தீவுகளைக் கொண்ட நாடு
- இந்தோனேசியா

கூடிய யானைகள் உள்ள நாடு
- சிம்பாப்வே

கூடிய மழைவீழ்ச்சியைப் பெறும் பிரதேசம்
- இந்தியாவிலுள்ள சீராப்பூஞ்சி

உயரமான சிகரம்
- எவரெஸ்ட்

வெள்ளத்தில் மூழ்கும் நாடு
- பங்களாதேஷ்

*அம்னா அமான்*
*தரம்: 8*
*அல் கஸ்ஸாலி ம.க. அடுலுகம, பண்டாரகம*

## உயிரினங்கள் பற்றிய தகவல்கள்

மிகச் சிறிய முட்டையிடும் பறவை - **தேன் சிட்டு**

தனது எடையைப் போல 50 மடங்கு எடையைத் தூக்கக் கூடிய உயிரினம் - **எறும்பு**

கால்கள் இருந்தும் நடக்கத் தெரியாது பின்னோக்கிப் பறக்கும் பறவை - **ஹம்மிங் பேட்**

மிக உயரத்தில் உயிர்வாழக்கூடிய ஒரே பூச்சியினம் - **சிலந்தி**

முட்டை இடாமல் குஞ்சு பொறிக்கும் இனம், நீண்ட முதுகெலும்பு உள்ள உயிரினம் - **திமிங்கிலம்**

270° வரை தலையை திருப்பக்கூடிய பறவை - **ஆந்தை**

பல் இல்லாத முலையூட்டி - **தேவாங்கு**

தனது வாலில் உணவையும் நீரையும் சேமிக்கும் உயிரினம் - **பல்லி**

கண்கள் மூலம் சப்தத்தைக் கேட்கும் ஈரூடகவாழி - **தவளை**

***அப்துல்லாஹ் ஹமீட், தரம்: 4***
***கமு/ அல்மிஸ்பாஹ் மகா வித்தியாலயம்***
***கல்முனைக்குடி***

## பொது அறிவு

பன்டா கரடி அதிகம் காணப்படும் நாடு எது? சீனா

அனகொண்டா பாம்பு கூடுதலாகக் காணப்படும் நாடு எது? அமெரிக்கா

இதயத்தைப் பாதுகாக்கும் எலும்பு எது? விலா எலும்பு

அடுத்த FIFA காற்பந்து போட்டி எந்த நாட்டில் நடைபெற உள்ளது? பிரேசில்

சைக்கிளைக் கண்டுபிடித்தவர் யார்? மெக்மில்லன்

ஒளி செல்லும் வேகத்தைக் கண்டுபிடித்தவர் யார்? ரோமர்

மாணவர்களுக்கு இரு கைகளாலும் எழுதப் பழக்கும் நாடு எது? ஜப்பான்

நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எது? நோர்வே

50 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் பூ எது? கார்ட்ஸ் பூ

*கஷீபா ஸைறா காஹர், தரம்: 09*
*நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி*
*பேருவளை*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிரிக்கெட் உலகக்கிண்ண சாதனைகள்

| ஆண்டு | சாம்பியன் அணி | தலைவர் | எதிரணி | இடம் |
|---|---|---|---|---|
| 1975 | மேற்கிந்திய தீவுகள் | கிளைவ் லொயிட் | அவுஸ்திரேலியா | இங்கிலாந்து |
| 1979 | மேற்கிந்திய தீவுகள் | கிளைவ் லொயிட் | இங்கிலாந்து | இங்கிலாந்து |
| 1983 | இந்தியா | கபில் தேவ் | மேற்கிந்திய தீவுகள் | இங்கிலாந்து |
| 1987 | அவுஸ்திரேலியா | அலன் போர்டர் | இங்கிலாந்து | இந்தியா, பாகிஸ்தான் |
| 1992 | பாகிஸ்தான் | இம்ரான்கான் | இங்கிலாந்து | அவுஸ்திரேலியா, நியுசிலாந்து |
| 1996 | இலங்கை | அர்ஜுண ரணதுங்க | அவுஸ்திரேலியா | இந்தியா, பாகிஸ்தான், இலங்கை |
| 1999 | அவுஸ்திரேலியா | ஸ்டீவ்வோ | பாகிஸ்தான் | இங்கிலாந்து |
| 2003 | அவுஸ்திரேலியா | ரிக்கி பொன்டிங் | இந்தியா | தென்னாபிரிக்கா |
| 2007 | அவுஸ்திரேலியா | ரிக்கி பொன்டிங் | இலங்கை | பங்களாதேஷ், இந்தியா |
| 2011 | இந்தியா | டோனி | இலங்கை | இந்தியா, இலங்கை |



*றியாஸ் அஸாம்,*

*தரம்: 10*

*ஆலங்குடா மு.ம.வி*

# நோய்கள்

தைபோயிற்றுக் காய்ச்சல் எதன் மூலம் பரவுகிறது? அசுத்த நீரால்

இரும்புச் சத்து குறைவால் ஏற்படும் நோய் எது? இரத்தச் சோகை

பாம்பின் விஷத்தை எந்த நோய்க்கு மருந்தாய் பயன்படுத்துகிறார்கள்? புற்று நோய்

மஞ்சள் காமாலையால் பாதிக்கப்படும் உறுப்பு எது? கல்லீரல்

பித்தக்கான் தடைப்படுவதால் ஏற்படும் நோய் எது? செங்கண்மாரி

அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய் எது? கண்டக் கழலை

மனித உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அழிக்கும் நோய் எது? எயிட்ஸ்

கல்சியம் குறைபாட்டால் ஏற்படும் நோய் எது? எலும்பு வளர்ச்சி பாதிக்கப்படல்

காற்றினால் பரவும் நோய்கள் எவை? அம்மை, காச நோய்

நுளம்பினால் பரவும் நோய்கள் எவை? மலேரியா, மூளைக் காய்ச்சல்

எஸ்.எப். ஹஜ்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விவசாய
### ஆராய்ச்சி நிலையங்களும் அமைந்துள்ள இடங்களும்

| | |
|---|---|
| தென்னை ஆராய்ச்சி நிலையம் - | லுணுவில |
| இறப்பர் ஆராய்ச்சி நிலையம் - | அகலவத்தை |
| தேயிலை ஆராய்ச்சி நிலையம் - | தலவாக்கலை |
| உலர் வலய ஆராய்ச்சி நிலையம் - | பத்தலகொடை |
| சதுப்பு நில ஆராய்ச்சி நிலையம் - | வோம்புவெல |
| உலர் வலய பயிர் ஆராய்ச்சி நிலையம் - | மகா இலுப்பல்லம |
| பட்டுப்புழு ஆராய்ச்சி நிலையம் - | பல்லேகல |
| பூங்கனியியல் ஆராய்ச்சி நிலையம் - | கன்னொருவ |
| உருளைக் கிழங்கு ஆராய்ச்சி நிலையம் - | சீத்தா எலிய |

# முதலை பற்றிய சில தகவல்கள்

முதலைகள் நீரின் மேலே தலையை நீட்டியவாறே நீந்திச் செல்கின்றன.

வேறு உயிரினங்களுக்கு நாக்கு இருப்பது போல முதலைக்கு நாக்கு இல்லை.

முதலையின் தோல் பல தோற்பொருட்கள் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது. இதனால் முதலைகள் அதிகமாக கொல்லப்படுகின்றன.

முதலைகள் தமது வியர்வையை கண்ணின் ஊடாகவே வெளியேற்றுகின்றன.

முதலைகள் நீரிலும் நிலத்திலும் வாழக்கூடியவை.


முதலைகள் அதிகமாக மீன்களையே உணவாக உட்கொள்கின்றன.

முதலைகள் நீரில் நீந்தும்போது வேகமாக நீந்துகின்றன. நிலத்தில் நடக்கும்போது மெதுவாக நகர்கின்றன.

முதலைகள் முட்டை இடுவதற்காக நிலத்திற்கு வந்து வைக்கோலில் முட்டையிடுகின்றன.

முதலைகள் இடும் முட்டை மிகப் பெரியதல்ல. கோழி முட்டையைப் போன்று சிறியதுதான்.

முதலைகள் இடும் முட்டைகளின் மேலுறை வெண்ணிறமாகவும் கடினமாகவும் இருக்கும்.



எம்.எஸ்.எம். அனஸ்
சிறாஜ் அரபுக் கல்லூரி
ஓட்டமாவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஹம்மத் [ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்]:

# முழுமையான முன்மாதிரி

இன்று நமக்கு நல்ல முன்மாதிரிகள் தேவைப் படுகின்றனர். எமது வாழ்க்கையில் அத்தகைய நல்ல முன்மாதிரிகளைக் காண்பது அரிதாகவே இருக் கிறது. அவ்வாறான முன்மாதிரிகள் இல்லாத போதும் என்றும் வாழும் நல்ல முன்மாதிரியாக எம் உயிரிலும் மேலான நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் விளங்குகிறார்கள்.

அன்னாரைப் பற்றி நாம் பெரிதாக அறிந்ததும் இல்லை; அவர்களை எம் வாழ்வில் முன்மாதிரி யாகக் கொள்வதுமில்லை. எமக்கு அருட்கொ டையாக வந்த அருமைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது வாழ்வை நன்றாகக் கற்று பிறருக்கும் அன்னாரைப் பற்றிச் சொல்லி எம் வாழ்விலும் நாம் அன்னாரை முன்மாதிரியாகக் கொள்வதற்கு சிறுவயதிலிருந்தே பழகிக் கொள்ள வேண்டும்.

எமக்கு மிகவும் பிடித்த ஒருவரின் செயற்பாடு களின் தாக்கம் எம்மிடம் காணப்படும். நாம் அவ ரைப் போலவே உடை உடுத்தவும் உணவருந்தவும் விரும்புவோம். எமது உள்ளத்தில் அவர் ஆழ்ந்த தாக்கம் செலுத்தியிருப்பார். அவரையே நாம் முன்மாதிரியாகக் கொள்வோம். இது மனித இயல்பு.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எமக்கு மிகவும் நேசத்துக்குரியவராக இருக்கும்போது இயல்பாகவே நாம் அன்னாரைப் பின்பற்ற விரும்புவோம். அன்னாரைப் பற்றி தேடிக் கற்போம். அன்னாரைப் போலவே செயற் பட விரும்புவோம்.

#### அன்னாரின் மீது அன்பு கொள்ளல்

நாம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீது கொள்ளும் அன்பின் வெளிப் பாடாகவே அன்னாரைப் பின்பற்றுவது அமைந் திருக்கிறது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம்) அவர்கள் மீதான அன்பு ஏனையோர் மீது கொள்ளும் அன்பைப் போன்றதல்ல. நபியவர் களின் மீதான அன்பு எமது ஈமானின் வெளிப்பாடு.

ஒரு முறை உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், "யா ரஸூலல்லாஹ்! இந்த உலகிலுள்ள அனைத்தையும் விட, எனது உயிருக்கு அடுத்ததாக, நான் உங்களை அதிகம் நேசிக்கிறேன்" என்று சொன்னபோது, "நீங்கள் ஈமான் கொண்டவராக மாட்டீர்கள்" என்றார்கள். உடனே, உமர் (ரழியல் லாஹு அன்ஹு) அவர்கள், "எனது உயிரிலும் மேலாக உங்களை நேசிக்கிறேன்" என்றபோது "இப்போதுதான் நீங்கள் ஈமான் கொண்டவரா வீர்கள்" என்று கூறினார்கள்.

#### அண்ணலாரை அழகிய முன்மாதிரியாகக் கொள்ளல்

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நமக்கு நல்ல முன்மாதிரி என்பதை நாமறி வோம். எமது உடை, நடை, பேச்சு, பண்பாடு, ஏனையோருடனான உறவு, நட்பு, கல்வி, விளை யாட்டு என அனைத்து செயற்பாடுகளுக்கும் அன் னார் அழகிய முன்மாதிரி ஆவார்கள். அன்னாரின் முன்மாதிரிகளை நாம் பல இடங்களில் கற்றிருப் போம். ஆனால் எமது வாழ்க்கையில் நபியவர்களை முன்மாதிரியாகக் கொண்டு எமது செயற்பாடு களை அமைத்துக் கொள்கிறோமா என்பதுதான் கேள்விக்குறி.

#### முன்மாதிரி என்றால் என்ன?

நாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதனை யாரிட மிருந்து கற்று, யாரைப் பின்பற்றுகிறோமோ அவரே எமக்கு முன்மாதிரியாவார். சிலபோது நாம் யார் யாரையெல்லாமோ எமது முன்மாதிரி யாகக் கொண்டிருப்போம். ஆனால் அவர்களை எல்லாம் விட சிறந்த முன்மாதிரியாக நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் திகழ்கி றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்பாடுகளைப் பூரணப்படுத்தியவர்கள்**

"நிச்சயமாக நான் பண்பாடுகளைப் பூரணப் படுத்தவே அனுப்பப்பட்டுள்ளேன்" என நபியவர்கள் கூறினார்கள். பண்பாடுகளின் சிகரமாக அன்னார் திகழ்ந்தார்கள். நபியவர்களின் பண்பாடுகள் எப்படி இருந்தன; அன்னாரைப் பின்பற்றும் எமது பண் பாடுகள் எப்படி இருக்கின்றன என்பதை நாம் ஒருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தன்னைத் துன்புறுத்தியவர்களை மன்னிக்கும் பண்பாடு நபிகளாருடையது. உதவி கேட்பவர்க ளுக்கு இல்லையென்று சொல்லாது உவந்தளிப்பது அன்னாரின் பண்பாடு. பெண்களின் உரிமைக ளையும் சிறுவர்களின் உரிமைகளையும் முதியோரின் உரிமைகளையும் ஆண்களின் உரிமைகளையும் பெற்றுக் கொடுத்த பண்பாடு அவருடையது. இத் தகைய பண்பாடுகளின் கிரீடமாகத்தான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் திகழ்ந்தார்கள்.

இன்று மாணவர்கள் மாத்திரமன்றி மனிதர்களும் பண்பாடு இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே, இழந்த பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் நாம் மீளப்பெற வேண்டும்.

**எந்த விடயத்தையும் நிதானமாக நீதியாக விவேகமாக அணுகுதல்**

ஹுதைபிய்யா உடன்படிக்கையின்போது நபிகளார் எந்தளவு தூரநோக்கோடும் விவேகத் துடனும் நடந்து கொண்டார்கள் என்பதை வர லாற்றில் நாம் கற்றிருப்போம். ஸஹாபிகள் கோப மடைந்தபோதும் நபியவர்கள் நிதானமாக நடந்து கொண்டார்கள். உடன்படிக்கை எழுதப்பட்டுக் கொண்டிருக்கும்போதே குறைஷிகளிடமிருந்து ஒருவர் தப்பிவந்து நபியவர்களுடன் இணைந்து கொள்ள முற்பட்டார். உடன்படிக்கையின்படி அவரை இணைத்துக் கொள்ள முடியாததாகை யால் நீதியான முறையில் நடந்து கொண்டார்கள்.

ஹுதைபிய்யாவில் மாத்திரமன்றி நபியவர் களின் வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த நிதானத்தையும் நீதியையும் விவேகத்தையும் கண்டுகொள்ளலாம். நபிகளாரை முன்மாதிரியா கக் கொள்ளும் நாங்கள் இத்தகைய பண்புகளை அணிகலன்களாகக் கொண்டிருக்க வேண்டும்.

**அறிவுபூர்வமாகவும் ஆக்கபூர்வமாகவும் விமர்சனங்களுக்கு பதிலளித்தல்**

நபியவர்களைப் பற்றி அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே ஏராளமான பொய்யான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் அத்தகைய விமர்சனங்களுக்கு நபியவர்கள் தமது செயற்பாட்டின் மூலமும் அறிவுபூர்வமான அணுகுமுறை ஊடாகவும் ஆக்கபூர்வமான விதத்திலும் பதிலளித்தார்கள்.

வயது முதிர்ந்த மூதாட்டியின் பொருட்களைச் சுமந்து சென்று அவளுக்கு உதவி செய்யும்போது அந்த மூதாட்டி, உதவி செய்பவர்தான் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) என்று தெரியாமல் அவர்களுக்கு ஏசியபடி வந்தபோது, நபியவர்கள் எத்தகைய பண்பாடான முறையில் நடந்து அந்த மூதாட்டியின் தவறான மனப்பதிவை நீக்கினார்கள் என்ற வரலாறு எமக்குத் தெரியும். எனவே, நபியவர்களுக்கு எதிரான தவறான விமர் சனங்கள் வரும்போது இத்தகைய அறிவுபூர்வமான ஆக்கபூர்வமான அணுகுமுறைகளைக் கையாண்டு நாம் நபிகளார் பற்றிய உண்மையான மனப்பதிவை அவர்களிடம் ஏற்படுத்த முனைய வேண்டும். மாறாக, அத்தகைய கீழ்த்தரமான விமர்சனங்க ளால் கோபம் கொண்டு பண்பாடற்ற முறையில் நடந்து கொள்வது அறிவுடைமையாகாது.

இத்தகைய அன்பான அணுகுமுறைகள்தான் பலரை இஸ்லாத்தின்பால் ஈர்த்தன. அவர்களது ஈனச் செயலுக்காக அவர்களை மனம் வருந்தச் செய்தன. நபியவர்கள் செல்லும் பாதையில் தினமும் குப்பைகளையும் முட்களையும் போட்டு நபியவர்களைத் துன்புறுத்திய மற்றுமொரு மூதாட்டி நோயுற்றிருந்தபோது, தனக்கு தீங்கிழைத்தவளுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் என எண்ணாது, அவளை நோய் விசாரிக்கச் சென்ற பண்பாட்டை என்னவென்பது!

இவை மாத்திரமன்றி கோப உணர்வை நீதிக் காகவும் நியாயத்திற்காகவும் வெளிப்படுத்தல், எதிர்பாராத நிகழ்வுகளை சாணக்கியமாகக் கை யாளுதல், தவறு செய்தவர்களை நீதியின் முன் நிறுத்தல், தவறு செய்யாதவர்களைத் தண்டனை யிலிருந்து காப்பாற்றுதல் போன்ற இன்னோரன்ன உயரிய பண்புகளைப் பெற்றிருந்தார்கள். எனவே, அண்ணலாரை அழகிய முன்மாதிரியாகக் கொள்ளும் நாம் நமது வாழ்வில் அன்னாரின் அழகிய பண்பு களைப் பெற்று நல்ல முன்மாதிரிகளாக வாழ்வோம், இன்ஷா அல்லாஹ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## How much do you know?

**Assalamu alaikum dear friends!**

# October, a very busy month for students.




- 1st - children's day, elders' day
- 2nd - International day of non-violence
- 5th - World teachers' day
- 9th - World post day
- 10th - World mental health day
- 11th - World sight day
- 13th - International day of disaster reduction
- 15th - Interational day of rural women
- 16th - World food day
- 17th - International day for the eradication of poverty
- 24th - United nations day

I hear some one saying,
"WOW !!! the October calendar is full of special days !!!"

## *Now let's see , how to make a teachers' day greeting card !*


1. Take a paper or board (any colour you like)
2. Get a lots of crafty things ( things like markers, crayons, glitter, glue, stickers, ribbons, pressed flower petals etc)
3. Be creative , use your things to create some thing nice on your paper
4. If can, attach a small surprise gift using a ribbon
5. Write a special note, tell your teacher how much you like his/her teaching.
6. Pack it in a hand made envelope, and hand-deliver it in the morning.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Laugh! ( for teachers)

You know friends, respecting your teacher is a very good and important Islamic practice. The prophet (SAW) himself was a very good teacher, and he encouraged respecting teachers.

RESPECT





*Try to write about your favourite teacher and send it to us.*

## Exercise

### Write '*to*' or '*in*'

1. I like reading ________ bed
2. We're going ________Colombo next month
3. What time do you usually go ________ bed?
4. Would you like to live ________ another country
5. It's going ________ rain now

## Your corner




## My life is to you

You made my life bright
You brought an aim to me
You change my soul with hopes
Being with you is happy to me

Oh Allah, forgive me
Give me your 'Hidayath'
And protect me with love
Living as a Muslim is happy to me

You taught me a way
To enter your heaven
You taught me the life path
Through the pleasant 'Quran'

Oh Allah may I be your's
My life is to you
Make me a 'Shaheed'
And take me to castle 'Barzook'

Kalutara Ashrat Ali
Tanveer Acadamy


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A testimony

I asked for strenght and
God gave me difficulties to make me strong
I asked for wisdom and
God gave me problems to solve

I asked for prosperity and
God gave me brain and brawn to work
I asked for courage and
God gave me dangers to overcome

I asked for love and
God gave me troubled people to help
I received nothing I wanted
I received everything I needed

**J.A.F.Afra**
**Madawala Bazar**

# Entry by mail

I'm a Mobil phone. Every one knows me.

First of all I'm easy to use, **communicate** and I'm **handy**. You can call any where, local or international. I can **entertain** you as well. **You can check internet, taxing, you can play games and so on. The** other point of view is, it is easy to send or check e-mail and your personal data through.

In contrast I'm **dangerous** for you. I can **infect your heath** .When you talk too much on me I can **damage your hearing and infect your brain** .The other disadvantage is that I waste your **time and your money**. You will get addicted to me and I make you have no feeling to study or anything. Specially, I have face book, the popular social network site among teen.

Everything has advantages and disadvantages . So **you need to use me very carefully**.

**J.M.Fathima Mara**

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/5,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

## 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

### 10ம் தரம்




i. அருகிலுள்ள தேசப்படத்தில் A,B,C என்ற எழுத்துக்களால் குறிப்பிடப்படும் இராச்சியங்களை அதே ஒழுங்கில் தருக.

*(3 புள்ளிகள்)*

ii. A. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தமை

B. விஜயபாகு கொள்ளை இடம்பெற்றமை

C. கரையோர கிளர்ச்சி இடம்பெற்றமை

D. பிரித்தானியா முடிக்குரிய நாடாக மாறியமை

இச்சம்பவங்கள் நடைபெற்ற ஆண்டுகளை அதே ஒழுங்கில் தருக. *(4 புள்ளிகள்)*

iii. *1803 இல் ஆங்கிலேயர் கண்டியைக் கைப்பற்ற முடியாமல் போனதற்கான காரணங்கள் இரண்டை விளக்குக.* *(4 புள்ளிகள்)*

iv. *1848ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கான காரணங்கள் இரண்டை விளக்குக.* *(6 புள்ளிகள்)*

**விடைகள்**

i. A. சீதாவாக்கை B. றைகம C. கோட்டை

ii. A. *1505* B. *1521* C. *1797* D. *1802*

iii. *திட்டமிடாமை*

*1803*இல் ஆளுநர் பிரட்ரிக் நோர்த் கண்டி மீது படையெடுத்தார். இவரது படையெடுப்பு திட்டமிட்ட முறையில் அமைய, மலைநாட்டின் இயற்கைத் தோற்றம் பற்றிய சரியான தகவல்களை அவர் பெறவில்லை. கணவாய்களுடன் கூடிய மலைப் பிரதேசமானது ஆங்கிலேயருக்கு பல கஷ்டங்களைக் கொடுத்தது. நோர்த்தின் படை கண்டிக்குச் சென்ற போது பருவ மழை ஆரம்பித்தது. நதிகள் வேகமாக பெருக்கெடுத்து ஓடின. இதனால் கண்டிக்கு வந்த படையினருக்கு அவசியமான உணவுகளையும் மருந்துகளையும் கொழும்பில் இருந்து பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகள் ஏற்பட்டன. கண்டியின் காலநிலை, அவர்களது அடையாளம், போர்த் தந்திரம் முதலியவை பற்றி ஆளுநர் நோர்த் நன்கு திட்டமிடாது படையெடுத்ததனால் அப்படையெடுப்பு தோல்வியைத் தழுவியது.

**மக்களின் ஆதரவு**

கண்டி மக்கள் தமது முழுமையான ஆதரவை மன்னனுக்கு வழங்கியமையால் ஆளுநர் நோர்த்தின் படை தோல்வியடைந்தது. ஆங்கிலேயர் தாம் கைப்பற்றிய கரையோரப் பகுதிகளில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பினர். இதனால் கண்டி மக்கள், ஆங்கிலேயரை வெறுத்தனர். ஆங்கிலேயர் கண்டியைக் கைப்பற்றினால் மலையகத்திலும் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பிவிடுவார்கள் என்று அவர்கள் பயந்தார்கள். அதேவேளை, பௌத்த சமயத்தைப் போற்றுபவர்களாக கண்டி மன்னர்கள் அமைந்தார்கள். பிக்குகளுக்கு கண்ணியம் வழங்குதல், விகாரைகளுக்கு கிராமங்களை நன்கொடையாக வழங்குதல் போன்ற நடவடிக்கைகளில் மன்னர்கள் ஈடுபட்டனர். இதனால் மக்கள் மன்னனுக்கு ஆதரவு காட்டினார்கள். இந்த ஆதரவே 1803இல் ஆளுநர் நோர்த்தின் படை தோல்வியைத் தழுவியமைக்கு பிரதான காரணியாகும்.

iv. *பாழ்நிலச் சட்டம்*

*1833*இல் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கோல்புறுக் யாப்பினால் பெருந்தோட்டத் துறை வளர்ச்சியடைந்தது. மலைநாட்டில் ஆங்கிலேயருக்கு அதிகமான காணிகள் தேவைப்பட்டன. இதன் காரணமாக அவர்கள் 1840இல் பாழ்நிலச் சட்டத்தை (தரிசுநிலச் சட்டம்) கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனர். இதனால் அதிகமான கண்டி மக்களுக்குரிய நிலங்களை ஆங்கிலேயரால் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. பயிர்செய்யப் படாத அல்லது உரிய ஆவணங்கள் இல்லாத நிலங்கள் அனைத்தும் ஆங்கில அரசுக்குச் சொந்தம் என்று பாழ்நிலச் சட்டம் கூறியது.

இதன் மூலம் காணிகளை இழந்த கண்டி மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கினார்கள். மந்தை வளர்த்தல், விறகு வெட்டுதல், விவசாயம் செய்தல் என்பவற்றை அவர்களால் செய்ய முடியாதிருந்தது. இச்சட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களே இக்கிளர்ச்சியில் பெரும்பாலும் ஈடுபட்டார்கள். இதனால் இக்கிளர்ச்சி 'விவாசாயிகள் கிளர்ச்சி' எனப்படுகின்றது.

### கம்சபா முறை நீக்கப்பட்டமை

கோல்புறூக்கோடு இலங்கைக்கு வந்த கமறன் இலங்கையில் செயல்பட்ட கம்சபா முறையை ஒழித்தனர். கம்சபா (கிராம சபை) முறையானது இலங்கையில் நீண்ட காலம் நடைமுறையில் இருந்த ஒரு முறையாகும். கிராம மக்கள் தமது பிரச்சினைகளை கம்சபா மூலம் தீர்த்துக் கொண்டனர். இம்முறையை கமறன் நீக்கி, இங்கிலாந்தில் இருந்த நீதிமன்ற முறையை இங்கு நடைமுறைப்படுத்தினார். இதுவரை பொருட்செலவில்லாமல் தமது வழக்குகளை கம்சபா மூலம் தீர்த்துக் கொண்ட கிராம வாசிகள், நீதிமன்றங்களுக்கு அதிக பணத்தை செலவழித்தனர். அவர்கள் சட்டத்தரணிகளுக்கும் முத்திரைகளுக்கும் அதிக பணத்தை செலவிட்டனர். இது 1848 கிளர்ச்சிக்கு வழிவகுத்தது.

## 11ம் தரம்

1. A. சந்தைக்கு ஏற்பவே உற்பத்தி செய்தமை
   B. சோவியத் ரஷ்யாவின் உளவுச் சேவை
   C. அதிக பாதுகாப்புச் செலவு
   D. போட்டி அடிப்படையிலான உற்பத்தி நடைபெறாமை
   E. பொதுவுடமையைப் பரப்ப அதிக பணம் செலவிடப்பட்டமை

   மேலுள்ள அம்சங்களுள் சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த 3 காரணிகளைக் குறிக்கும் எழுத்துக்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. சோவியத் ரஷ்யாவின் எழுச்சிக்கு வழிவகுத்த காரணிகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

iii. ரஷ்யாவின் வீழ்ச்சியினால் ஏற்பட்ட சர்வதேச விளைவுகள் இரண்டை விளக்குக. (5 புள்ளிகள்)

iv. இருபதாம் நூற்றாண்டில் ஜப்பான் வளர்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் மூன்றை விளக்குக. (3 புள்ளிகள்)

### விடைகள்

i. C,D,E

ii. அ) பொதுவுடமைப் புரட்சி
   ஆ) ஐந்தாண்டுகாலத் திட்டங்கள்
   இ) பொதுவுடமையின் தலைமையை ஏற்றல்
   ஈ) வார்சோ அமைப்பை தோற்றுவித்தல்

iii. **ஐக்கிய அமெரிக்கா தனி வல்லரசாக மாறியமை**

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்பு உலகில் இரு வல்லரசுகள் உருவாகின. ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரஷ்யா ஆகிய இரு வல்லரசுகளும் சம பலமுள்ளவையாக இருந்தன. கனடா, போர்த்துக்கல், ஒல்லாந்து முதலிய முதலாளித்துவ நாடுகள் தமது தலைமை நாடாக ஐக்கிய அமெரிக்காவை ஏற்றுக் கொண்டன. கியூபா, வடகொரியா முதலிய பொதுவுடமை நாடுகள் சோவியத் ரஷ்யாவை தமது தலைமை நாடாக ஏற்றுக் கொண்டன. சோவியத் அதிபராக மிகையில் கொப்பசேவ் ஆட்சிக்கு வரும் வரை இந்த நிலை இருந்தது. அவர் அறிமுகப்படுத்திய சீர்திருத்தங்களின் விளைவாக சோவியத் ரஷ்யா வீழ்ச்சியடைந்தது. இதன் காரணமாக ஐக்கிய அமெரிக்கா போட்டியில்லாத தனி வல்லரசாக மாறியது. ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான், எகிப்து, சிரியா ஆகிய நாடுகளில் ஐக்கிய அமெரிக்காவே தலையிடுகின்றது.

### கெடுபிடி யுத்தம்

1945ஆம் ஆண்டு முதல் முதலாளித்துவ அணிக்கும் பொதுவுடமை அணிக்கும் பனிப்போர் நடைபெற்றது. இக்கால கட்டத்தில் பேர்லின் பிரச்சினை, கொரியப் பிரச்சினை, சுயஸ் நெருக்கடி, கியூபா நெருக்கடி முதலிய மோதல் நிலைமைகள் உருவாகின. 1950 ஜுன் 25ஆம் திகதி தென் கொரியாவை ஆக்கிரமித்து வட கொரியாவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவாக பொதுவுடமை அணியும் தென் கொரியாவுக்கு ஆதரவாக முதலாளித்துவ அணியும் செயல்பட்டன. ஒரு உலக யுத்தம் தோன்றக் கூடிய அளவுக்கு நிலைமை இருந்தது. அதுபோல கியூபா நெருக்கடியும் இருந்தது. ஐக்கிய அமெரிக்காவை அழிக்கக்கூடிய வகையில் கியூபாவில் சோவியத் ரஷ்யா ஏவுகணைகளைப் பொருத்தியது. இவ்வாறு இடம்பெற்ற கெடுபிடி யுத்தம், சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியினால் முடிவுக்கு வந்தது.

### iv. புதிய அரசியல் யாப்பு

இரண்டாம் உலக யுத்தத்தில் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஜப்பான் விரைவாக வளர்ச்சியடைந்தமைக்கு அங்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய யாப்பு காரணமாக அமைந்தது.

1947 மே 3ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்ட புதிய யாப்பு ஜனநாயக ஆட்சிக்கு வழிவகுத்தது. இன்று உலகில் ஜப்பான் சிறந்த ஜனநாயக நாடாக விளங்குவதற்கு இந்த யாப்பே அடிப்படையாக அமைந்தது. பழைய யாப்பில் முக்கிய அதிகாரங்கள் பேரரசருக்கு ஒப்படைக்கப்பட்டன. இந்த யாப்பில் முக்கிய அதிகாரங்கள் மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டன. இந்த யாப்பின்படி 486 பேரைக் கொண்ட மக்கள் பிரதிநிதிகள் சபை ஏற்படுத்தப்பட்டது.

### வெளிநாட்டு உறவு

ஜப்பான் இயற்கை வளம் குறைந்த ஒரு நாடாகும். விவசாயத்திற்குப் பொருத்தமான நிலம் 16.2 வீதமாகவே காணப்படுகின்றது. கனிய வளங்களும் அங்கு குறைவாகவே உள்ளன. எனினும், ஜப்பான் உலகில் எல்லா நாடுகளுடனும் நட்புறவைப் பேணுகின்றது. இதன் காரணமாக ஜப்பானின் கைத்தொழில் பொருட்களை எல்லா நாடுகளும் விரும்பி வாங்குகின்றன. ஜப்பானுக்கு தேவையான கனிய வளங்களை உலகில் பல நாடுகளும் வழங்குகின்றன. 1951இல் ஜப்பான் ஐக்கிய அமெரிக்காவுடன் ஒப்பந்தத்தை செய்து கொண்டது. 1952இல் சீனாவுடனும் 1956இல் ரஷ்யாவுடனும் நெருக்கமான உறவுவைப் பேணும் ஜப்பானின் சிறந்த வெளிநாட்டு உறவே ஜப்பானின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது.

### கைத்தொழில் வளர்ச்சி

1945இல் ஜப்பானில் அணுகுண்டு வீசப்பட்டதால் அது மோசமாக பாதிக்கப்பட்டது. எனினும் ஜப்பான் மேற்கொண்ட சிறந்த நடவடிக்கைகள் அதனை உலகில் சிறந்த கைத்தொழில் நாடாக மாற்றின. 1945 இலிருந்து 1952 வரை ஜப்பான் தனது கைத்தொழில்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தது. 1952 முதல் 1959 வரை அது கைத்தொழில்களை ஒன்றிணைத்தது. 1960 தொடக்கம் 1967 வரை அது பல்வேறுபட்ட கைத்தொழில்களிலும் கவனம் செலுத்தியது. இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக 1965இல் 612 மில்லியன் டொலர் பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1960-1965 காலகட்டத்தில் உலகில் பிரதான மோட்டார் சைக்கிள் உற்பத்தி நாடாக ஜப்பான் மாறியது.

ஹஜ்ஜின் வரலாற்றுப் படிப்பினை... (4ஆம் பக்கத் தொடர்...)

அதேபோன்று இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது வாழ்விலும் கற்றுக் கொள்ள வேண்டிய எண்ணற்ற பாடங்கள் உள்ளன. அவர் சென்ற பாதையான முட்கள் தூவப்பட்ட மக்கத்து பள்ளத்தாக்காயினும் சரி, அவர் மீது கற்கள் வீசப்பட்ட தாயிப் பள்ளத்தாக்காயினும் சரி, அவரது பற்கள் சில உடைந்த உஹுத் போர்க்களமாயினும் சரி, அவருக்கு எதிராக சகலவித அவதூறுப் பிரசாரங்களையும் செய்த மதீனத்துத் தெருக்களாயினும் சரி இவை அனைத்திலும் அவர்கள் எமக்கு மிகச் சிறந்த தியாகத்தின் முன்மாதிரிகளை விட்டுச் சென்றுள்ளார்கள். அவர்களைப் போன்றே அவர்களைப் பின்பற்றியவர்களும் தோழர்களும் விட்டுச் சென்றுளார்கள்.

இவை அனைத்தும் இந்த தியாகத் திருநாளான ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் மீள்வாசிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டிய மிகப் பெரும் வாழ்வியல் உண்மைகளாகும். இதனையே ஒவ்வொரு வருடமும் ஹஜ்ஜுப் பெருநாள் எம்மிடம் எதிர்பார்த்து நிற்கின்றது.


"அவற்றின் மாமிசங்களோ அல்லது அவற்றின் இரத்தங்களோ அல்லாஹ்வை ஒருபோதும் சென்றடைந்து விடாது. எனினும், உங்களிலுள்ள பயபக்தியோ அவனை அடையும்."

(அல்ஹஜ்: 37)

இன்ஷா அல்லாஹ், இத்தகைய ஹஜ்ஜின் வரலாற்றைக் கற்று அதன் ஒளியில் எமது பெருநாள் கொண்டாட்டங்களை அமைத்து அதன் மூலம் அல்லாஹ்வின் அன்பையும் சுவனத்தையும் பெற்றுக்கொள்ள முயற்சிப்போமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளார்ந்த ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளுங்கள்



ஜே.எம். அஸீம்

"உங்கள் மகனை வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள். அவன் படிப்பதற்கு லாயக்கற்றவன்."

பாடசாலையில் ஒரு மாணவனின் தாயை அழைத்து ஆசிரியர் கூறிய வார்த்தைகள்தான் இவை.

ஆனால், அந்த மாணவனின் தாய் ஓய்ந்துவிடவில்லை. அந்த மாணவனின் திறமையை வகுப்பு ஆசிரியர் வேண்டுமானால் அறியாமலிருக்கலாம். ஆனால், அந்தக் குழந்தையின் தாய் தன் மகனின் திறமையை அறியாத ஒருவரல்ல. மாறாக, கோபங்கொண்டு பள்ளி ஆசிரியரிடம், "எனது மகனுக்கு என்ன குறை?" என்று கூச்சலிடவுமில்லை. அல்லது "மக்கு... மக்கு... ஒன்றுக்கும் உதவாதவன்" என்று தனது மகனைத் திட்டித் தீர்க்கவுமில்லை. அமைதியாக தன் மகனை அழைத்துக்கொண்டு வீடு சென்றாள் அந்தத் தாய்.

அந்தக் குழந்தைதான் உங்கள் வீடுகளில் ஒளிர்ந்து கொண்டிருக்கும் மின்குமிழைக் கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசன். மின்குமிழ் மாத்திரமல்ல, பல ஆயிரக்கணக்கான கண்டுபிடிப்புகளின் சொந்தக்காரர் அவர். பாடசாலையில் "படிக்க லாயக் கற்றவன்" என்ற பட்டம் பெற்ற இவருக்குள் மறைந்திருந்த அறிவை, புலமையை, ஆராய்ச்சித் திறமையை இனங்கண்டு வழிகாட்டிப் பயிற்றுவித்தவர் இவரது தாய்.

இப்படி உங்களுக்குள்ளும் மறைந்து, உங்களுக்குத் தெரியாத பல திறமைகள் ஒளிந்திருக்கும். அவற்றை அறிந்து முயற்சி செய்தால் வெற்றி விரைவில் கைகூடும்.

**உங்களுக்குள் ஏதோ ஓர் ஆற்றல் மறைந்திருக்கிறது என்று நம்புங்கள்**

தலைமைத்துவப் பயிலரங்குகளில் இப்படியொரு கோட்பாட்டை கற்றுக் கொடுப்பார்கள்:

| | உங்களுக்குத் தெரிந்தது | மற்றவர்களுக்குத் தெரிந்தது |
|---|---|---|
| உங்களுக்குத் தெரியாதது | | |
| மற்றவர்களுக்குத் தெரியாதது | | |

இது உணர்த்தும் உண்மை என்ன?

ஒன்று, உங்களுக்கும் தெரிந்த, மற்றவர்களுக்கும் தெரிந்த திறமைகள் இருக்கும்.

இரண்டு, உங்களுக்குத் தெரிந்த மற்றவர்களுக்குத் தெரியாத திறமைகள் இருக்கும்.

மூன்று, உங்களுக்குத் தெரியாத மற்றவர்களுக்குத் தெரிந்த திறமைகள் இருக்கும்.

நான்கு, உங்களுக்கும் தெரியாத மற்றவர்களுக்கும் தெரியாத திறமைகள் இருக்கும்.

இதில் நாம் இங்கு பேச வருவது மூன்றாவதும் நான்காவதும் ஆகும். உங்களுக்குத் தெரியாத திறமைகள் இருக்கும் என்பதை அறிந்திருப்பீர்கள். எனவே, எனக்கு இதுவரை தெரியாத உள்ளார்ந்த ஆற்றல் இருப்பதை இப்போது மனதார நம்புங்கள்.

**நீங்கள் நம்பிய அந்த ஆற்றலை இனங்கண்டு கொள்ளுங்கள்**

உங்களுக்குள் ஆற்றல் இருப்பதை இப்போது நீங்கள் 100 வீதம் நம்பி விட்டீர்கள். உங்கள் நம்பிக்கையை வீணாக்கி விட வேண்டாம். எனவே, அந்த ஆற்றல் எது என உங்களுக்குள் தேடிப் பாருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது பகுதியைக் கண்டறிய வழி, நேரடியாக உங்களுக்கு நம்பிக்கையுள்ள, உங்கள் நலனில் அக்கறையுள்ளவர்களிடம் கேட்டால் உங்களுக்குத் தெரியாத மற்றவர்களுக்குத் தெரிந்த திறமையை காட்டித் தருவர். அல்லது நீங்கள் சற்று அமர்ந்து சிந்தித்தால் உங்களால் புரிந்து கொள்ள முடியுமாக இருக்கும். பிறரால் நீங்கள் பாராட்டப்பட்ட சந்தர்ப்பத்தைப் சிந்தித்துப் பாருங்கள். எந்தத் திறமைக்காக நீங்கள் பாராட்டப்பட்டீர்கள் என்பதை மீண்டும் மீண்டும் சிந்தித்துப் பாருங்கள்.

உங்களை சிலர் உற்சாகப்படுத்தும்போது அவர்கள் உங்களிடமுள்ள எந்தத் திறமையை வெளிக்கொண்டுவர உற்சாகப்படுத்துகிறார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள். இவ்வாறு நீங்கள் சிந்திக்கின்றபோது உங்களுக்குள் மறைந்துள்ள உள்ளார்ந்த திறமைகளை அறிந்து கொள்ள முடியும்.

**இனங்கண்ட ஆற்றல்களை அரும்பாடுபட்டு வளர்த்தெடுங்கள்**

நீங்கள் கண்டறிந்த திறமையை வளர்த்தெடுக்க அரும்பாடுபட வேண்டும். உங்கள் முயற்சிகளைக் குவிக்க வேண்டும். தியாகம் செய்ய வேண்டும். இழப்புகளை எதிர்கொள்ள வேண்டும். தோல்விகளைத் தாங்கிக் கொள்ள வேண்டும். எத்தனையோ பேர் தங்கள் இயல்புகளை மீறிய ஆற்றல்களை அரும்பாடுபட்டு வளர்த்தெடுத்துள்ளனர். கண் பார்வை இல்லாத கெலன் ஹிலர் தன் உள்ளார்ந்த ஆற்றலை அறிந்து தன்னை அரும்பாடுபட்டு வளர்த்தெடுத்தார்.

**ஆற்றல்களைப் பட்டை தீட்டுங்கள்**

நீங்கள் இவ்வாறாக வளர்த்தெடுத்த ஆற்றல்களை உச்சநிலையில் வைத்திருங்கள். பட்டை தீட்டப்பட்ட இரத்தினக்கல்தான் ஜொலிக்கும் என்பது போல் பட்டை தீட்டப்பட்ட உங்கள் திறமைகள்தான் பிரகாசிக்கும். உங்கள் ஆற்றல்களை எந்தளவுக்கு வளர்த்தெடுக்க இயலுமோ அந்தளவுக்கு வளர்த்தெடுங்கள். உங்களுக்கு நீங்களே போதுமென்ற வரையறை விதித்துக் கொள்ள வேண்டாம்.

**உங்கள் ஆற்றல்களை உங்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவுவதாகப் பயன்படுத்துங்கள்**

உங்களது ஆற்றல்களை உங்களுக்குள் மாத்திரம் சுருக்கிக் கொள்ள வேண்டாம். உங்களால் முடியுமானவரை உங்கள் ஆற்றல்களை மற்றவர்களுக்கும் பயன்படுத்துங்கள். மற்றவர்களுக்கு உதவும்போது உங்கள் ஆற்றல்கள் மற்றவர்களுக்குப் பயன்படுவதோடு அவை மென்மேலும் வளரக் காரணமாக அமைந்துவிடுவதுண்டு. உங்கள் ஆற்றல்களை மற்றவர்களுக்குப் பயன்படுத்துவதால் அவை ஒன்றும் குறைந்துவிடப் போவதில்லை.

**ஆற்றலுக்கு அறிவைச் சேருங்கள்**

அறிவில்லாத ஆற்றல் பயனற்றது அல்லது உரிய பலனைத் தராது. பலர் பல்வேறு திறமைகளைப் பெற்றிருப்பர். ஆனால், அவற்றைப் பயன்படுத்தக் கூடிய அறிவு இல்லாததால் அத்தகைய திறன் இருந்தும் பயனின்றிப் போய்விடுவதுண்டு. மற்றும் சிலருக்கு அறிவு விருத்தியடைந்திருக்கும். அவர்களிடம் அறிவைப் பயன்படுத்தும் ஆற்றல் காணப்படாது. எனவே, இந்த இரண்டும் சேர்ந்த நிலையே உரிய பயனைத் தரவல்லது.

**அறிவையும் ஆற்றலையும் விருத்தி செய்யுங்கள்**

அறிவு, ஆற்றல் விருத்தி செய்யப்படுகின்றபோது தான் எந்த சவாலையும் எதிர்கொண்டு பயணிக்க உதவும். நீங்கள் கஷ்டப்பட்டு இனங்கண்டு வளர்த்தெடுத்த ஆற்றலையும் அறிவையும் விருத்தி செய்யாமல் இருக்கின்றபோது அது தேக்கமடைந்து நலிவடைந்து விடும். நாளடைவில் அந்த ஆற்றலும் அறிவும் மங்கிப் போய்விட அது காரணமாகி விடும். வாள் தீட்டப்படும்போது தான் கூர்மையடையும். கூரியவாள் என்பதற்காக பயன்படுத்தாமல் பட்டை தீட்டாமல் வைத்திருந்தால் அது கூர்மையிழந்து மங்கி பயன்பாட்டிற்கு உதவாததாக மாறிவிடும்.

**உங்கள் ஆற்றலே உங்கள் தனித்துவம்**

உங்களுக்கு இருக்கின்ற ஆற்றல் உங்களுக்குரிய தனித்துவமாகும். உங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள ஆற்றல்களைக் கொண்டு நீங்கள் மற்றவர்களைப் போல் நடந்து கொள்ளாதீர்கள். உங்கள் தனித்துவம் பேணுங்கள். மற்றவர்களிடமிருந்து நீங்களும் உங்களது செயற்பாடும் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதைப் பொறுத்தே உங்கள் தனித்துவமான ஆற்றல் மற்றவர்களைக் கவரும். எதையும் மக்களுக்கு உதவுவதாக, இலகுவானதாக, தரமானதாக கொடுக்க வேண்டும் என்ற தனித்துவம்தான் அப்பிள் உற்பத்திகளை இன்னும் முதற்தரத்தில் வைத்திருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சியட் (CEAT) கிரிக்கட் விருதுகள் 2012




2012 செப்டெம்பரில் கொழும்பில் விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

**விருது விபரங்கள்**

சிறந்த சர்வதேச ஒரு நாள் துடுப்பட்ட வீரர்
- மஹேல ஜயவர்த்தன

ஆண்டின் மக்களின் விருப்பு வீரர்
- குமார் சங்ககார

சிறந்த வளர்ந்து வரும் வீரர்
- தினேஷ் சந்திமால்

சிறந்த பந்து வீச்சாளர்
- ரங்கன ஹேரத்

சிறந்த சகலதுறை ஆட்ட வீராங்கனை
- சசிகலா ஸ்ரீவர்தன

சிறந்த துடுப்பாட்ட வீராங்கனை
- சாமரி அத்தபத்து

சிறந்த மகளிர் பந்து வீச்சாளர்
- ஷெரீனா ரவிகுமார்

## நிலவில் கால் பதித்த முதல் மனிதன் நீல் ஆம்ஸ்ரோங்



நீல் அல்டென் ஆம்ஸ்ரோங் 1930- ஒகஸ்ட்-05 இல் அமெரிக்காவின் ஒகியோவில் உள்ள வபா எனெட்டாவில் பிறந்தார்.

1969 ஜூலை 21 இல் அப்பலோII விண்கலத்தின் மூலம் நிலவில் கால் பதித்த முதல் மனிதன் எனும் சாதனையை நிலைநாட்டினார்.

நிலவில் காலடி வைத்தபோது "என்னுடைய சிறிய காலடி மனித குலத்திற்கே ஒரு மாபெரும் பாய்ச்சல்" என்ற பிரபலமான வார்த்தையை குறிப்பிட்டார்.


2012 ஆகஸ்டில் தனது 82ஆவது வயதில் காலமானார்.

# World Today



திரு. பீ. உமா சங்கர்,
B.Com (Jaf), M.Com (Kelaniya) (R) Spl.Trd.Com,
NDBF, Sri Lanka Technical College - Colombo

## 16வது அணிசேரா மாநாடு



புதிதாக சுதந்திரம் பெற்ற ஆபிரிக்க நாடுகளை ஒன்றிணைத்து 1961ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

உலகின் பிரதான அதிகார சக்திகளுடன் கூட்டுச் சேராத 120 நாடுகள் தற்போது இதில் அங்கம் வகிக்கின்றன.

இம்மாநாடு 2012 ஒகஸ்டில் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்றது.


இம் மாநாட்டில் அணு ஆயுதப் பரம்பல், மனித உரிமைகள், சிரியாவின் சிவில் யுத்தம் ஆகிய விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபைக்கு அடுத்தபடியாக உள்ள மிகப் பெரிய சர்வதேச அமையம் இவ் அணிசேரா நாடுகள் அமைப்பாகும்.

PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல் 2012




கிழக்கு, சப்ரகமுவ, வட மத்தி ஆகிய மாகாணங்களுக்கான மாகாண சபைத் தேர்தல்கள் 2012 செம்டெம்பரில் நடைபெற்றன.

இத்தேர்தலில் பிரதான கட்சிகள் பெற்ற வாக்கு சத வீதம் வருமாறு:

| இல | கட்சிகள் | மாகாணங்களும் வாக்கு சதவீதங்களும் | | |
|---|---|---|---|---|
| | | கிழக்கு | சப்ரகமுவ | வடமத்தி |
| 01. | ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 31.58 | 59.18 | 61.23 |
| 02. | ஐக்கிய தேசிய கட்சி | 11.82 | 34.73 | 35.47 |
| 03. | தமிழ் தேசிய கூட்டமைப்பு | 30.59 | - | - |
| 04. | ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 20.98 | - | - |
| 05. | இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - | 3.13 | - |

கிழக்கு மாகாணத்தின் முதலாவது முஸ்லிம் முதலமைச்சராக நஜீப் ஏ. மஜீத் 2012 செப்டெம்பரில் நியமிக்கப்பட்டார்.

## உலக தற்கொலை தவிர்ப்பு தினம்

உலக தற்கொலை தவிர்ப்பு தினம் 2012 செப்டெம்பர் 10இல் அனுஷ்டிக்கப்பட்டது.

2012ஆம் ஆண்டில் இத்தினத்தின் கருப்பொருள் "உலக ரீதியாக சிந்தி; தேசிய ரீதியாக திட்டமிடு; உள்ளூர்வாசியாக செயற்பாடு" என்பதாகும்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையின்படி ஒவ்வொரு 40 செக்கனுக்கும் ஒருவர் என்ற ரீதியில், அதாவது ஒரு இலட்சம் பேரில் 16 பேர் என்ற வகையில் உலகளாவிய ரீதியில் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

15 தொடக்கம் 44 வயதுக்கு இடைப்பட்டோரே அதிகளவில் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

இலங்கையில் 1995இல் ஒரு இலட்சம் பேருக்கு 47 பேர் என்ற ரீதியில் இருந்த தற்கொலை மரணங்கள் 2006இல் 22 ஆகக் குறைந்துள்ளன.

இலங்கையில் சராசரியாக நாள் ஒன்றிற்கு 12 தற்கொலை முயற்சிகள் இடம்பெறுவதுடன் ஆகக் குறைந்தது 10பேர் அதில் தோல்வி அடைகின்றனர்.



## க.பொ.த உயர்தரம் 2011இன் உயர்நீதிமன்ற உத்தரவு

2011 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான, ஏற்கனவே வெளியிடப்பட்ட Z புள்ளி நிலைகள் இரத்து செய்யப்பட்டு 2012 செப்டெம்பரில் புதிய Z புள்ளி நிலைகள் வெளியிடப்பட்டன.

புதிய நிலைகளின் பிரகாரம் மேலும் 4928 மாணவர்களை அனுமதிக்குமாறு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.



## சர்வதேச பௌத்த பல்கலைக்கழகம்

இந்தியாவின் சாஞ்சி நகரில் நிர்மாணிக்கப்பட உள்ளது.

2012 செம்டெம்பரில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அடிக்கல் நடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்லை தரும் தொலைக்காட்சியும் தொலைந்துபோகும் கனவுகளும்

ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)


ஒரு குழந்தை பிறந்து வளரும்போது அது தான் பிறந்த சமூகத்துக்குரியதாக மாறுவது அவசியம். மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும் தன்னை சமூகத்தின் அங்கத்தவராக இணைத்துக் கொள்வதற்காக அவர்களால் எடுக்கப்படுகின்ற முயற்சி அல்லது அவர்களுக்கு வழங்கப்படுகின்ற பயிற்சி சமூகமயமாக்கல் எனப்படுகின்றது. இந்நடவடிக்கை முறையில் சமூகத்தில் இருக்கின்ற பல சமூக முகவர்கள் பங்குகொள்கின்றனர்.

இம்முயற்சி அல்லது பயிற்சியானது பெரும்பாலும் சிறுவர்கள் மத்தியில் அதிகமாகக் காணப்படுகின்றது. இவ்வாறான முயற்சியும் பயிற்சியும் அவர்களுக்கு வழங்கப்படுகையில் முறையான, முறையற்ற விதங்களில் அவை இடம்பெறுவதைப் பொறுத்து அச்சிறுவர்கள் வளர்ச்சியையும் பின்னடைவையும் கொண்டிருக்கின்றார்கள்.

சமூகமயமாக்கல் நிகழ்வானது சிறுவர்கள் மத்தியில் இடம்பிடிப்பதில் சமூகமயமாக்கல் நிறுவனங்களான குடும்பம், உறவினர்கள், பாடசாலை, சகபாடிகள், நண்பர்கள், தொழில் இடங்கள் மற்றும் ஊடகங்கள் என்பன பெரிதும் தாக்கம் செலுத்துகின்றன. இதனால் ஒரு பிள்ளை முறையான அல்லது முறையற்ற விதத்தில் சமூக அங்கத்தவராக ஆகிவிடுகின்றது.

அதிவேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நவீனமயமான உலகத்தில் சிறுவர்களின் போக்கினை ஆராயும்போது அவர்களின் வளர்ச்சிப் போக்கு மிகவும் குறைவான வீதத்தில் உள்ளதை அவதானிக்க முடிகிறது. அதற்குப் பிரதான காரணமாக முறையற்ற விதத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சமூகமயமாக்கல் செயற்பாடுகள் உள்ளன.

எதிர்காலத்தில் தாம் சிறந்த நற்பிரஜைகளாக வரவேண்டும் என்ற கனவு எல்லாச் சிறுவர்களிடமும் காணப்படும் ஒன்றாகும். ஆரம்பப் பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்களிடம் உம்முடைய எதிர்கால இலட்சியம் என்ன? எதிர்காலத்தில் என்னவாக வர விரும்புகிறீர்கள்? என்ற வினாக்களை வினவும்போது, தான் ஒரு வைத்தியராக, பொறியியலாளராக, ஆசானாக, சமூக



சேவகனாக வரவேண்டும் என அவர்கள் பதிலளிப்பதிலிருந்து அவர்களுடைய எதிர்கால இலட்சியக் கனவுகளை அறிந்து கொள்ள முடிகிறது.

காலப்போக்கில் இத்தகைய மாணவர்கள் தங்களுடைய கனவுகளை, எதிர்கால இலட்சியங்களை எங்கோ ஒரு மூலையில் தொலைத்துவிட்டு நட்ட நடுக்காட்டில் திக்குத் திசை தெரியாதவர்களைப் போல், நடுக் கடலில் மாலுமி இல்லாத பாய்மரப் படகைப் போல் தாம் செல்லும் திசையும் வழியும் தெரியாமல் இலக்கின்றி அலைவதை நாம் பார்க்கின்றோம்.

சின்னச் சின்ன ஆசைகள், சிற்றின்பத் தேவைகள் மற்றும் சிறந்த, நாகரிகமான சமூகத்திற்குப் பொருத்தமற்ற செயற்பாடுகள் இவர்களுடைய இலக்குகளாக அமைகின்றன. இதற்குக் காரணம் இத்தகைய பிள்ளைகள் பிழையான முறையில் சமூகமயப்படுத்தப்படுவதாகும். சமூகமயமாக்கல் நிறுவனங்கள் இவற்றுக்குப் பெரிதும் காரணமாக அமைகின்றன. குறிப்பாக ஊடகங்களின் பங்கு மிகப் பாரியது.

பிள்ளைகள் தவறான முறையில் சமூகமயமாவதில் தொலைக்காட்சி எவ்வாறு காரணமாக அமைகின்றது என்பதை இக்கட்டுரையில் விரிவாக நோக்குவோம்.

இன்றைய நவீன யுகத்தில் ஒரு மாணவனின் பண்பாடு, நடத்தை, பேச்சு, மனப்பாங்கு, சிந்தனைப் பாங்கு மாத்திரமன்றி, அவனது முழு ஆளுமையைத் தீர்மானிப்பதில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பரந்தளவு தாக்கம் செலுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளிடம் தொலைக்காட்சியின் ஆதிக்கம் மற்றும் விபரீதம் பற்றிய ஓர் ஆய்வு புகழ்பெற்ற மிச்சிங்காம் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப் பட்டது. இந்த ஆய்வு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதிக்கும் விதம் பற்றி மிகவும் அதிர்ச்சிகரமான தகவல்களை வெளியிட்டுள்ளது.

1. சாதாரண குழந்தை பள்ளிக்கூடத்தில் செல வழிக்கும் நேரத்தைக் காட்டிலும் தொலைக் காட்சியில் அதிக நேரம் செலவழிக்கிறது.
2. சராசரியாக ஒரு வாரத்திற்கு 20 மணி நேரம் தொலைக்காட்சியில் செலவழிகிறது. இது தூக்கத்தைத் தவிர மற்ற எல்லா செயல்களைக் காட்டிலும் அதிகமாகும்.
3. சராசரியாக 70 வயது நிரம்பிய மனிதன் 7 முதல் 10 ஆண்டுகள் வரையான நேரத்தை தொலைக் காட்சியில் செலவு செய்கிறான்.
4. விளம்பரங்கள் குழந்தைகளை இலக்காக வைத்துத் தயாரிக்கப்படுகின்றன. மாதந்தோறும் ஆயிரக்கணக்கான வியாபார விளம்பரங்கள் தயார் செய்யப்படுகின்றன.
5. ஒரு வருடத்திற்கு 1000 முதல் 2000 வரையிலான போதை சம்பந்தப்பட்ட விளம்பரங்களை குழந்தைகள் பார்க்கின்றன.

**வன்முறையும் தொலைக்காட்சியும்**

1. பெரியவர்களுக்குத் தயாரிக்கப்படும் நிகழ்ச்சி களைக் காட்டிலும் குழந்தைகளுக்கு தயாரிக் கப்படும் நிகழ்ச்சிகளில் ஐந்து முதல் ஆறு மடங்கு வன்முறை நிகழ்ச்சிகள் காண்பிக்கப்படுகின்றன.
2. சனி, ஞாயிறுகளில் 20 முதல் 25 வரையான வன்முறைக்காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன.
3. பள்ளிப் படிப்பை முடிக்கும் முன் குழந்தைகள் 800 கொலைகளைப் பார்க்கின்றன.
4. 10,000 கற்பழிப்புகள், அடிதடிகள், கொலைகள் என்பவற்றை ஒவ்வொரு வருடமும் குழந்தைகள் பார்க்கின்றன. அவர்கள் பார்த்ததுபோல் வன் முறையில் ஈடுபட முனைகின்றன.
5. பாடசாலையில் சேர முன்னரே வயது வந்த வர்கள் பார்க்கும் நிகழ்ச்சிகள் குழந்தைகளை மிகவும் பாதிக்கின்றன.
6. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மிகக் கெட்ட நடத்தைகளை வளர்க்கின்றன.
7. நினைப்பதை அடைய வன்முறைதான் தீர்வு என்று காண்பிக்கப்படுகின்றன.
8. நிறைய நிகழ்ச்சிகள் வன்முறை நிகழ்ச்சிகளுக்கு தண்டனையில்லாமல் காண்பிக்கப்படுகின்றன, அவை கேலிக்குரியதாகவும் காண்பிக்கப் படுகின்றன.
9. நல்லவர்கள் கெட்டவர்களை அடிப்பது நல்லது போலவும் அது சாதாரணமானது போலவும் சித்திரிக்கப்படுகிறது. விளையாட்டுகளில் இது போன்று நிரூபிக்க குழந்தைகள் முயலுகின்றன.
10. தொலைக்காட்சியில் வரும் Fast food உணவு, இனிப்புப் பதார்த்தங்களில் மட்டுமே ஆரோக் கியமும் சுத்தமும் இருப்பதுபோல் குழந்தைகள் நினைக்கின்றன. ஆனால், உண்மையில் அவ்வாறில்லை.

இத்தகைய காட்சிகள் குழந்தைகளின் இலட்சிய வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கின்றன என்ப தையும் இந்த ஆய்வு தெளிவுபடுத்துகிறது.

1. தொலைக்காட்சி மூளை வளர்ச்சியைப் பாதிக்கிறது.
2. தொலைக்காட்சி பார்ப்பது குழந்தைகளின் மற்ற செயல்களை அதாவது விளையாடுதல், பழகுதல், வீட்டுப் பாடம் படிப்பது, பெற்றோ ருடன் நேரத்தை செலவிடுவது, சுகாதாரமான காற்றோட்டதைச் சுவாசிப்பது போன்றவற்றை நிர்மூலமாக்குகிறது.
3. குழந்தைகள் தொலைக்காட்சி பார்ப்பதினால் பசியின்மை, தூக்கமின்மை, மந்த புத்தி, சகவாச மின்மை, முரட்டுத்தனம், பார்வைப் பாதிப்பு போன்ற பின்விளைவுகளைப் பெறுகின்றன.

இந்த ஆய்வின் முடிவை வைத்து நோக்கும் போது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒரு குழந் தையை அவனது இலட்சிய வாழ்விலிருந்து பிறழச் செய்து தவறான சமூகமயமாதலுக்கு வழி வகுக்கின்றன என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

இவை தவிர தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மாணவர்கள் பாலியல் ரீதியாக நெறி தவறுவதற் கும் சிறு வயதிலேயே காதல் வயப்பட்டு கற்பை இழப்பதற்கும் புகைத்தல், மது அருந்துதல் போன்ற போதைப் பொருளுக்கு அடிமையாவ தற்கும் துணை செய்கின்றன.

**(தொடரும்...)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நந்திக் கலம்பகம்

**மாதிரி வினா விடை**

*01. அ) கலம்பகம் எனப்படுவது யாது?*

ஆ) நந்திக் கலம்பகத்தின் பாடுபொருள், துணைக் கருத்துகளைக் கூறுக.

இ) நந்திக் கலம்பகத்தில் நந்தி மன்னனது வீரம், கொடை, நகரச் சிறப்பு சிறப்பிக்கப் படுமாற்றை துலக்குக.

**விடை**

*01. அ)* 'கலம்பகம்' எனப்படுவது பல்வகைப் பொருள் தொடர்பாக வெவ்வேறு செய்யுள் வகைகளைக் கொண்டு நூறு பாட்டுக்கள் கொண்டமைந்த சிற்றிலக்கிய வகையாகும்.

ஆ) நந்திக் கலம்பகத்தின் பாடுபொருள், துணைக் கருத்துக்கள் பற்றி நோக்குவோம்.

நந்தி வர்மனின் சிறப்பு, தலைவன் ஒருவன் தலைவி மீது கொண்ட காதலும் பிரிவுத் துயரமும், காதலிக்கு துன்பம் தரும் நிலா, நந்திவர்மனது நாட்டுச் சிறப்பும் கொடைச் சிறப்பும், நந்திவர்மனின் வீரம் முதலானவற்றை பாடுபொருளாக இனங்காண முடிகிறது.

துணைக் கருத்துக்களாக, கொடும்பாலையைக் கடந்து தலைவி சென்றமை, நந்திவர்மனது நகரச் சிறப்பு, கொடைச் சிறப்பு, கார்காலம் வந்தும் காதலர் வராத தலைவியின் துயரம், தலைவனது வீரம் முதலானவற்றை எடுத்துக் காட்ட முடிகிறது.

இ) நந்திக் கலம்பகம் நந்திவர்மன் என்ற பல்லவ அரசனைப் புகழ்ந்து பாடப்பட்ட நூலேயாகும். கற்பனை வளமும் சுவையும் மிக்க இப்பாடல் வரிகள் ஒவ்வொன்றும் மன்னனது வீரம், கொடை, நகர வளத்தை சிறப்பாக எடுத்துக் கூறுவதை காண்கிறோம்.

நந்திவர்மன் இராமன் போன்ற குணப் பண்புகளை உடையவன், மேகத்தைப் போலக் கொடுக்கின்ற தன்மை கொண்டவன், தமிழ்ப்பற்று மிக்கவன், ஏகத்தியாகி எனக் கருதத்தக்கவன் என்று போற்றப்படுகிறான். அத்துடன் குலப்பெருமை கொண்டவன், ஆற்றல் மிக்கவன், தன்னலம் துறந்தவன் என்றவாறும் புகழப்படுகிறான்.

"கோட்டை இடிதகழ் குன்றாக்கி..." என்று தொடரும் பாடலில் நந்தி மன்னனது சிறப்பு கூறப்படுகிறது. மன்னனது நாட்டிலுள்ள ஆண் யானைகள் பகைவர்களின் கோட்டைகளுக்கான பாதுகாப்பு மதில்களை தகர்த்தெறிந்து விடுகின்றன என்று மன்னனது யானைப் படையின் பலத்தின் மூலம் மன்னனது ஆளுமை, தலைமைத்துவச் சிறப்பு, படைகளைத் தோற்றுவித்தல், பயிற்றுவித்தல் திறன் புலப்படுகிறது.

சிறந்த மன்னன் என்பவன் தானாளும் நகர மக்களை வறுமையின்றி இன்பமாக பாதுகாப்புடன் வாழ வைப்பவனே ஆவான். நந்திவர்மனது ஆட்சியும் மக்கள் நலனுக்காகவே என்கிறது நந்திக் கலம்பகம்.

"மண்ணெலாம் உய்ய மழைபோல் வழங்கும் கரம்" என்று நந்திவர்மனது கொடைச்சிறப்பு உவமை மூலம் எடுத்துக் காட்டப்படுகிறது.

மேலும், நந்திவர்மனின் ஆற்றலும் குலப்பெருமையும் வீரமும் போர்த்திறனும் வெற்றியும் தூதுவனாக வந்தவனுக்கு வீரமறவனால் எடுத்துக் கூறப்படும் பாடல் வரிகள் கலம்பக இலக்கியத்தில் நனி சொட்டுபவை.

"நந்தி பதம் சேரார் ஆனைக்
கொம்பன்றோ நம் குடிலில்
குறுங்காலும் நெடுவளையும்
குனிந்து பாரே"

என்று பகைவர் படைகள் அழித்து யானைகளின் தந்தங்களை தூண்களாகக் கொண்டு சிறு குடிசையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்துள்ளமை நந்திவர்மனின் வெற்றிவாகையை பறைசாற்றுகின்றது.

இவ்வாறாக நந்திக் கலம்பகம் இயம்பும் ஒவ்வொரு வரியும் நந்திவர்மனின் நாட்டு வளம், கொடை, வீரம் என்றவாறு இன்னோரன்ன சிறப்புகளை விளக்குவதாகவே அமைவதை எடுத்துக் காட்ட முடிகிறது.

**மேலதிக வினா:**

பின்வரும் பாடல் வரிகள் கொண்ட பாடல்களின் நயத்தினை விளக்குக.

"ஓடுகின்ற மேகங்காள்! ஓடாத தேரில் வெறும் கூடு வருகுதென்று கூறுங்கள்..."

"வெண்ணிலா ஊரில் பிறந்தாரைப் போல வரும் வெண்ணிலா வேயிந்த வேகமுனக்காகதே..."

**விடை:**

"ஓடுகின்ற மேகங்காள்! ஓடாத தேரில்..."

இப்பாடலானது தலைவன் ஒருவனின் மன நிலையை அழகாக எடுத்துக்காட்டுகிறது. தலைவியை காணச் செல்லும் தலைவன் வேகமாகச் சென்று மனைவியின் இருப்பிடமடைய தவிப்பதை இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

மேகமானது தன்னுடைய தேரை விட வேகமாகச் செல்வதாக உணர்கிறான் தலைவன். தான் வரும் செய்தியைக் கூறும்படி மேகத்தைத் தூதாக அனுப்புவது நயம்படத்தக்கதாகும்.

மேலும், ஓடாத தேர் என்று கூறுவதுடன், வெறும் கூடு வருவதாகக் கூறுவதும் சிறப்பானதாக விளங்குகிறது. மனைவியிடம் அவனது உயிர் முன்பே சென்று விட்டதாகவும் இப்பொழுது வருவது வெறும் கூடு என எதிர்பார்த்திருக்கும் தலைவியிடம் கூறும்படி கூறுவதும் நயம்படத்தக்கதாகும்.

இவ்வாறாக தலைவனது ஆவலும் அன்பும் தவிப்பும் இப்பாடல் வரிகள் சுவைபட உணர்த்துகின்றன எனலாம்.

**விடை:**

"வெண்ணிலா ஊரில்..."

தலைவனின் பிரிவினால் துயருற்ற தலைவி இரவு நேரமானதும் சந்திரன் வரக்கண்டு அதனைப் பழிப்பதாக இவ்வரிகளைக் கொண்ட பாடல் துலக்குகிறது.

பெண்கள் வெண்ணிலாவை விரும்புவது இயற்கை. ஆனால், இந்தத் தலைவியோ தலைவன் பிரிவு காரணமாக குளிர்ச்சி பொருந்திய நிலவின் ஒளிக் கதிர்களை சுடுகதிராக எண்ணி அதனை வெறுக்கிறாள். பெண் பிறப்பே இல்லாத ஊரில் பிறந்தவர்களைப் போல் என்மேல் கொடுமை செய்கிறாயே எனக் கேட்கும் விதம் நயம்படத்தக்கது. "பெண்ணின் மன உணர்வைப் புரிந்து கொள்ளும் நீயே என்னைச் சுடுவது தகுமோ" எனக் கேட்பது நயம்பயக்கிறது. நிலவின் வரவை பழித்துரைக்கும் விதம் சிறப்புக்குரியது.

**உயிரிகளுக்கும் சூழலுக்கும்...** (31ஆம் பக்கத் தொடர்)

| உயிரியல் வகைக் காப்பு | | உதாரணம் | பண்புகள் |
|---|---|---|---|
| 1. | வாழிடத்தில் காத்தல் (உள்நிலைக் காப்பு) | சிங்கராஜ வனம், யால பூங்கா, பாதுகாக்கப்பட்ட வனங்கள், சரணாலயங்கள் | ➢ செலவு குறைவானது.<br>➢ போதிய இடவசதி வாய்ப்புகள் கிடைக்காமை<br>➢ இயற்கையான கூர்ப்பித்தல் நிகழும் |
| 2. | பிற இடங்களில் காத்தல் (வெளிநிலைக் காப்பு) | பின்னவல சரணாலயம், கடலாமை குஞ்சு பொறிப்பகம், தாவரவியற் பூங்கா, விலங்குக் காட்சிச் சாலை | ➢ அதிக செலவு ஏற்படும்<br>➢ இடவசதிகள், இனப்பெருக்க வாய்ப்புகள் குறைவு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**10,11 தர மாணவர்களுக்கானது**

# விஞ்ஞானம்

ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

## பௌதிகவியல் - தரம் 10 பொறிமுறைச் சக்தியை வேலைகளுக்காகப் பயன்படுத்தல்

**வேலை:** விசையின் காரணமாக இயக்கம் நடைபெறுதல் வேலை ஆகும். விசை பிரயோகிக்கப்பட்டு இயக்கம் நடைபெறவில்லையெனில் அங்கு வேலை நடைபெறவில்லை எனக் கருதப்படும்.

**சக்தி:** வேலை செய்வதற்கான ஆற்றல் சக்தி ஆகும்.

வேலை செய்யும்போது சக்தி செலவழிக்கப்படும்.

வேலை, சக்தி இரண்டினதும் அலகு: J (யூல்) ஆகும்.

01. பாரந்தூக்கி மூலம் 2000N சுமை 5m உயரத்திற்கு உயர்த்தப்படின், பாரந்தூக்கியினால் செய்யப்படும் வேலையைக் காண்க.

- சக்தி பல வடிவங்களில் காணப்படும். பொறிமுறைச் சக்தியானது அழுத்த சக்தி, இயக்க சக்தி இரண்டையும் குறிக்கும்.

**அழுத்த சக்தி (Ep)**

- பொருள் ஒன்றின் உயரம் அல்லது அதில் ஏற்படும் மாற்றம் காரணமாக அதில் சேமிக்கப்படும் சக்தி அழுத்த சக்தியாகும்.
- மலை மீது இருக்கும் கல், உயரமான இடத்தில் தேக்கி வைக்கப்படும் நீர் போன்றவை உயரம் காரணமாக கொண்டுள்ள அழுத்த சக்தி 'ஈர்ப்பு அழுத்த சக்தி' எனப்படும்.
- ஈர்க்கப்பட்ட வில், ஈர்க்கப்பட்ட றப்பர், நெருக்கப்படும் வளி என்பவற்றிலுள்ள அழுத்த சக்தி 'மீளியல் அழுத்த சக்தி' அல்லது 'மூலக்கூற்று அழுத்த சக்தி' ஆகும்.

ஈர்ப்பிலான அழுத்த சக்தி = mgh

02. நீர்வீழ்ச்சியொன்று 15m உயரத்தில் அமைந்துள்ளது. அவ் உயரத்திலுள்ள 500Kg நீர் கொண்டுள்ள அழுத்த சக்தியைக் காண்க. ($g=10ms^{-2}$)

**இயக்கப்பாட்டு சக்தி (Ek)**

- இயங்கிக் கொண்டிருக்கும் பொருள் கொண்டுள்ள சக்தி 'இயக்கப்பாட்டு சக்தி' ஆகும்.

Eg: ஓடும் நீர், காற்று, இயங்கும் வாகனம், ஓடும் விலங்கு

03. 30Kg திணிவுடைய விண்கல் ஒன்று $20ms^{-1}$ கதியில் விண்வெளியில் அசைந்து கொண்டிருப்பின் அது கொண்டுள்ள இயக்க சக்தியைக் காண்க.

04. சக்திக் காப்பு விதி என்பது யாது?

05. தென்னை மரமொன்றின் உயரம் 5m, அதன் உச்சியிலுள்ள mKg திணிவுடைய தேங்காய் ஒன்று நிலத்தில் விழும்போது அது அடையும் வேகம் யாது?

**வலு (Power)**

- வேலை செய்யும் வீதம் அல்லது சக்தியை வெளிவிடும் வீதம் 'வலு' எனப்படும்.

$$\text{வலு} = \frac{\text{செய்யப்பட்ட வேலை}}{\text{எடுத்த நேரம்}}$$

$$\text{வலு} = \frac{\text{நிலைமாற்றப்பட்ட சக்தியின் அளவு}}{\text{நேரம்}}$$

அலகு $= \frac{J}{S} = Js^{-1} = W$ (வாற்று)

06. 750w வலுவுடைய மின்னழுத்தி ஒன்றினால் ஆடை ஒன்றை 5 நிமிடத்திற்கு அழுத்தும் போது மின்னழுத்தி பயன்படுத்தும் சக்தியின் அளவைக் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையை இலகுவாக்கும் முறைகள்**

- வேலையை இலகுவாக்கும் சாதனங்களாக அமைபவை பொறிகளும் எஞ்சின்களும் ஆகும்.

07. எளிய பொறிகளின் வகைகள் எவை?

08. பொறிகளினால் வேலை இலகுவாக மேற்கொள்ளப்படுவது எவ்வாறு என்பதற்கு இரு வழிகளைக் குறிப்பிடுக.

$$\text{பொறிமுறை நயம்} = \frac{\text{சுமை}}{\text{எத்தனம்}}$$


$$\text{வேக விகிதம்} = \frac{\text{எத்தனம் அசைந்த தூரம்}}{\text{சுமை அசைந்த தூரம்}}$$

$$\text{பொறியின் திறன்} = \frac{\text{பொறிமுறை நயம்}}{\text{வேகவிகிதம்}}$$

அல்லது

$$\text{திறன்} = \frac{\text{பயப்பு வேலை}}{\text{பெய்ப்பு வேலை}}$$

09. சாய்தளம் ஒன்றின் வழியே 45Kg திணிவுடைய சுமையொன்று 6m தூரம் இழுத்துச் செல்லப்பட்டு 3m உயரத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. (g=10Nkg)




i. இதன் வேக விகிதம், பொறிமுறை நயங்களைக் காண்க.

ii. இங்கு வேக விகிதம்/ பொறிமுறை நயமும் சமனாக இராமைக்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

iii. இங்கு சாய்தளத்தின் திறன் யாது?

10. முதலாம் வகுப்பு நெம்புகோல்களைக் குறிக்கும் விடை எது?

1. கத்தரிக்கோல், நிறுத்தாடுவளை
2. பாக்குவெட்டி, துலாவும் வாளியும்
3. சாவணம், தூண்டில்
4. தும்புத்தடி, துலாக்கோல் தராசு

- சாய்தளம் ஒன்றில் குறைந்த எத்தனத்துடன் கூடிய சுமை உயர்த்தப்படுவதனால் இதன் பொறிமுறை நயம் எப்போதும் அதிகமாகும்.
- சாய்தளத்தில் சாய்வான பகுதியின் நீளத்திற்கும் செங்குத்துயரத்திற்கும் இடையிலான விகிதம் வேகவிகிதத்தைக் குறிக்கும்.
- கப்பிகளில் வேகவிகிதத்தை விட பொறிமுறை நயம் குறைவாக இருப்பதற்கு கப்பியில் உள்ள உராய்வும் கயிற்றின் பாரமும் காரணங்களாகும்.
- தனிக் கப்பியில் பொறிமுறை நயம் 1இலும் குறைவு. எனினும், அது எளிய பொறியாக இருப்பதற்கு காரணம் எத்தனம் பிரயோகிக்கப்படும் திசையை மாற்ற முடிவதாகும்.
- சில்லும் அச்சாணியும் பொறி வகையாக அமைவன கைத்துறப்பணம், சைக்கிள் கைப்பிடி, தேங்காய்த்துருவு கருவி, திருகாணி செலுத்தி என்பனவாகும்.
- இவற்றில் வேகவிகிதம், அதன் சில்லின் ஆரைக்கும் அச்சாணியின் ஆரைக்கும் இடையிலான விகிதம் வேகவிகிதம் ஆக அமையும்.

**எஞ்சின்கள்**

- எஞ்சின்கள் சிக்கலான பொறிகளாகும். இவை இரு வகைப்படும்.

1. அகத்தகன எஞ்சின்கள்: பெற்றோல், டீசல் என்பவற்றை உபயோகித்து தொழிற்படுபவை.
2. புறத்தகன எஞ்சின்கள்: நிலக்கரி, நீராவி போன்றவற்றால் இயக்கப்படுபவை.


- பெற்றோல் எஞ்சின்கள் வெளியேற்றும் வாயுக் கலவையில் காபனோர் ஒட்சைட்டு, கந்தகவீரொட்சைட்டு, ஈயச்சேர்வைகள் என்பன காணப்படும்.
- ஈயமற்ற பெற்றோலை உபயோகிக்கும்போது ஈய சேர்வைகளால் ஏற்படும் மாசுபடல் குறைக்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்க்கோளத்தின் ஒழுங்கமைப்பு மட்டமானது தனியன், குடித்தொகை, சாகியம், சூழற்றொகுதி, உயிர்க்கோளம் என எளிய அமைப்பிலிருந்து சிக்கலான அமைப்பு வரை வியாபித்துச் செல்கின்றது.

*01.* குடித்தொகை என்பது யாது? பொருத்தமான தொரு உதாரணத்தை எழுதுக.

*02.* குடித்தொகை ஒன்றின் பருமன் காலத்துடன் மாறுபடுவதைக் காட்டும் வரைபு கீழே தரப்பட்டுள்ளது. இங்கு அவத்தை 1, 2, 3 ஆகிய கட்டங்களில் வரைபு இவ்விதம் அமைவதற்கான காரணங்களை எழுதுக.




அவத்தை 1:..............................................

அவத்தை 2:..............................................

அவத்தை 3:..............................................

*03.* விண்வெளி ஆய்வு நிலையத்தை ஒரு சூழல் தொகுதியாக கருத முடியாமைக்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

*04.* பின்வரும் உணவுச் சங்கிலியைக் கருதுக.

தாவரம் → தத்துவெட்டி → ஓணான் → பருந்து

i. இதில் உள்ள இணைப்புகளின் எண்ணிக்கை யாது?

ii. இவ் உணவுச் சங்கிலிக்குப் பொருந்தும் வகையிலான எண்ணிக்கைக் கூம்பை வரைக.

iii. எண்ணிக்கைக் கூம்பு தலைகீழானதாக (எதிரானதாக) அமைவதற்கான 2 உதாரணங்களை எழுதுக.

iv. சக்திக் கூம்பகம் என்பது யாது?


v. சக்திக் கூம்பகமொன்று எப்போதும் நேரானதாகவே காணப்படும் என்பதற்கான காரணம் யாது?

**கனிப்பொருள் வட்டம்**

அங்கிகளின் உடலுக்குத் தேவையான பல்வேறு கனிப்பொருட்கள் பௌதிகச் சூழலுக்கும் அங்கிகளின் உடலுக்குமிடையே சுழற்சியடைந்து செல்வதைக் காண்பிக்கும் சக்கரங்கள் கனிப்பொருள் வட்டங்கள் எனப்படும்.

eg: காபன் வட்டம், நைதரசன் வட்டம்

05. காபன் மூலகம் உயிர்க்கோளத்தில் சுழற்சியடையும் விதம் பின்வரும் உருவில் தரப்பட்டுள்ளது.




i. A, B, C, D என்பவற்றால் குறிக்கப்படும் செயற்பாடுகளைப் பெயரிடுக.

ii. இங்கு நுண்ணங்கிகள் பங்கு கொள்ளும் செயற்பாடு ஒன்றைக் குறிப்பிடுக.

iii. தாவரங்கள் வளியிலுள்ள Cஐப் பெற்றுப் பயன்படுத்த முடியுமாயினும் வளியிலுள்ள Nஇனை நேரடியாகப் பயன்படுத்த முடியாது. தவாரங்கள் Nஐ எவ்வயன்கள் மூலம் பெற்றுக் கொள்கின்றன?


iv. காபன் வட்டத்தைப் பாதிப்படையச் செய்யும் செயற்பாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.

**சூழல் காப்பு வழிமுறைகள்**

சுற்றாடல் வளங்களிலிருந்து பயனைப் பெற்றுக் கொள்ளும் அதேவேளை, எதிர்கால சந்ததியினரின் பொருட்டு அவற்றைப் பாதுகாப்பது சூழல் காப்பு எனப்படும். சூழல் காப்பினை மேற்கொள்ள உயிர்ப் பல்வகைமையைக் காப்புச் செய்தல் வேண்டும். இது 2 வகைப்படும்.

(28ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியர்கள்

## என்றும் எப்போதும் எல்லோராலும் மதிப்பளிக்கப்பட வேண்டியவர்கள்

***ஆசிரியர் தினம் குறித்து தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பிரதம செயற்திட்ட அதிகாரியும் எங்கள் தேசம், ப்ரபோதய இதழ்களின் ஆசிரியருமான எம்.எச்.எம். ஹஸன் (M.Ed) அவர்களுடன் அகரம் மேற்கொண்ட நேர்காணல்***

அகரம்: ஆசிரியர் தினம் குறித்து?

எம்.எச்.எம். ஹஸன்: பொதுவாக இன்று ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தினம் கொண்டாடப் படுவது போல ஆசிரியர்களை கௌரவிக்க ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. ஆசிரியர் தினம் கொண்டாடப்பட வேண்டும்; அதில் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. ஆசிரியர் தினத்தில் மட்டும்தான் அவர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதில்லை.

ஆனால், இஸ்லாம் ஆசிரியர்களை சிலாகித்துப் பேசியுள்ளது. கற்பித்தல் எனும் மிகப் பெரிய பணியைச் செய்கின்ற கண்ணியவான்களாக இஸ்லாம் அவர்களை நோக்குகிறது. நபியவர்கள் கூட இவ்வுலகிற்கு ஆசானாகவே அனுப்பப் பட்டார்கள். நபிமார்களின் வாரிசுகளாக ஆசிரியர்கள் நோக்கப்படுகின்றனர். ஆசிரியர்களின் இப் பெரும் பொறுப்பின் காரணமாக இஸ்லாம் அவர்களை கண்ணியப்படுத்தி கௌரவித்துள்ளதுடன் அவர்களுக்கு மதிப்பளிக்கும்படியும் அவர்களுடன் பணிவாக நடந்து கொள்ளும்படியும் போதித்துள்ளது.

இஸ்லாம் மாத்திரமன்றி, பொதுவாக ஏனைய மதங்களும் ஆசிரியர்களை கௌரவப்படுத்தும் படியே போதிக்கின்றன. ஆசிரியர்களைக் கௌரவிக்கும் கலாசாரம் அன்று தொட்டு இன்று வரை இருந்து வருகின்றது. எனவே, நான் ஏலவே கூறியது போல என்றும் எப்போதும் எல்லோராலும் மதிப்பளிக்கப்பட வேண்டியர்கள் ஆசிரியர்கள். எனவே, அவர்களைக் கண்ணியப்படுத்தி கௌரவப்படுத்த ஆசிரியர் தினம் கொண்டாடப்படுவது பொருத்தமானதே.

அகரம்: ஆசிரியர் தினம் எவ்வாறு கொண்டாடப்பட வேண்டும்?

எம்.எச்.எம். ஹஸன்: இது மிக முக்கியமாகப் பார்க்கப்பட வேண்டிய விடயம். அன்று மாணவர்கள் தங்களது ஆசான்களுக்காகப் பிரார்த்திப்பவர்களாக, அவர்களின் சுக-துக்கங்களில் பங்கு கொள்பவர்களாக, அவர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படுகின்றபோது உதவி செய்பவர்களாக என்றும் மதிப்பளிப்பவர்களாக காணப்பட்டனர். இவ்வாறு என்றும் ஆசிரியர்களை மதிக்கின்ற நிலை ஏற்பட்டால் ஒவ்வொரு நாளும் ஆசிரியர் தினமாகவே இருக்கும்.

மாணவர்கள் அன்று போலவே இன்றும் ஆசிரியர் தினத்தில் மனதார அவர்களை வாழ்த்தி, அவர்களுக்காகப் பிரார்த்தித்து, உள்ளத்தில் ஆசிரியர்கள் மீது அன்பும் மரியாதையும் நிறைந்தவர்களாக வாழ்வதே சிறப்பானது.

இவ்வாறு கொண்டாடப்பட வேண்டிய ஆசிரியர் தினம் அதனது நோக்கத்தை மறந்து குறுகிய நோக்கம் கொண்டதாக சுருங்கி விட்டது. கொடுத்து எடுக்கும் கலாசாரமாக (Give and Take Culture) மாறிவிட்டது. இதற்கு யார் காரணம்?

தங்களது பெறுமதியை அற்பப் பொருட்களால் நிர்ணயிக்கும் ஒரு சில ஆசிரியர்களே இதற்கு முழுமையான காரணம். எத்தனையோ ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் ஆசிரியப் பணியை சேவையாகக் கருதி செய்கின்ற அதே வேளை, ஒரு சிலர் தங்களது குறுகிய இலாபங்களுக்காக பணத்தை மையமாகக் கொண்ட தொழிலாக இதனைக் கருதி பணம் சம்பாதிப்பதை மாத்திரமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாணவர்கள் தங்களது ஆசான்களுக்காகப் பிரார்த்திப்பவர்களாக, அவர்களின் சுக-துக்கங்களில் பங்கு கொள்பவர்களாக, அவர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படுகின்றபோது உதவி செய்பவர்களாக என்றும் மதிப்பளிப்பவர்களாக காணப்பட்டனர். இவ்வாறு என்றும் ஆசிரியர்களை மதிக்கின்ற நிலை ஏற்பட்டால் ஒவ்வொரு நாளும் ஆசிரியர் தினமாகவே இருக்கும்.

நோக்கமாகக் கொண்டு தொழில் செய்கின்றனர். இத்தகைய ஆசிரியர்களால் பிழையாக வழிநடத்தப்படுகின்ற மாணவர்கள், தாம் ஆசிரியர்களுக்கு ஏதாவது கொடுக்கும்போது தமக்கும் ஏதாவது நலவு கிடைக்கும் என்ற குறுகிய மனப்பான்மையில் ஏதாவது அற்பப் பொருட்களை வழங்கி அவர்களை விலை பேசி விடுகின்றனர்.

இதனால் வழிப்படுத்தப்பட வேண்டிய மாணவர்கள் வழிதவறவிடப்படுகின்றனர். பொருட்களின் பெறுமதியை விட உளமார்ந்த வாழ்த்துக்களுக்கும் மனம் நிறைந்த பிரார்த்தனைகளுக்கும் பெறுமதி அதிகம் என்பதை பலர் அறியாதுள்ளனர்.

ஆசிரியர் தினம் குறித்த நிகழ்ச்சிகள், கவிதை, கட்டுரைப் போட்டிகள், நாடகம் போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அத்தினத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறலாம். அனைத்து ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஒரே விதமான முறையில் உபசரிக்கலாம். பழைய மாணவர்கள் தமக்குக் கற்றுத் தந்த ஓய்வு பெற்ற ஆசிரியர்களை சந்தித்து அல்லது அவர்களை ஓரிடத்துக்கு அழைத்து கௌரவிக்கலாம். இவையல்லாமல் போலியான கௌரவங்கள் ஒருபோதும் ஆசிரியர்களை கௌரவித்ததாக அமையாது.

அகரம்: இன்று இத்தகைய போலியான கௌரவங்கள் வழங்கப்பட யார் காரணம்?

எம்.எச்.எம். ஹஸன்: ஒருவருக்கு வழங்கப்படும் கௌரவத்திற்குக் காரணம் அவரேதான். இதற்கு ஆசிரியர்கள் விதிவிலக்கானவர்கள் அல்ல. இன்று ஆசிரியர்களுக்கு இத்தகைய போலியான கௌரவங்கள் வழங்கப்படக் காரணம் ஆசிரியர்கள் மீது நம்பிக்கை இழந்த நிலையாகும்.

கசப்பான உண்மை என்னவென்றால், இன்று ஆசிரியர்கள் மீது மாணவர்கள், பெற்றோர், சமூகம் மாத்திரமன்றி அரசாங்கமும் நம்பிக்கை இழந்த நிலை காணப்படுகிறது.

மாணவர்கள் நம்பிக்கை இழக்கக் காரணம், ஆசிரியர்கள் பாரபட்சம் காட்டுகின்றமையாகும். போட்டிகளின்போது சில ஆசிரியர்கள் சில மாணவர்களுக்கு சார்பாக நடப்பதால் மாணவர்கள் இன்று மொத்த ஆசிரியர்கள் மீதும் நம்பிக்கை இழந்துள்ளனர்.

பெற்றோர் நம்பிக்கை இழக்கக் காரணம், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பாடசாலையில் கற்பிக்காமல் டியூசன் வகுப்புகளுக்கு அழைத்து கற்பிக்கின்றமை. இலவசமாகப் பெற வேண்டிய கல்வியை பல ஆயிரம் நோட்டுக்களை செலவழித்துக் கற்க வேண்டியது ஒரு பக்கம்; இதனால் மாணவர்கள் பாடசாலைகளில் என்ன செய்கின்றார்கள் என்பது புரியாத புதிர் மறுபக்கம். இதனால் பெற்றோரும் ஆசிரியர்கள் மீது நம்பிக்கை இழந்துள்ளனர்.

சமூகத்தைப் பொறுத்தவரை தாங்கள் எதிர்பார்த்த சமூகத்தை கட்டியெழுப்பாததாலும் சமூக நிர்மாணத்தில் பங்கு கொள்ளாததாலும் சமூகம் வழிதவறிப் போக ஏதோ ஒரு வகையில் காரணமாக அமைவதாலும் சமூகமும் அவர்கள் மீதுள்ள நம்பிக்கையை இழந்துள்ளது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை, தங்களது இலவசக் கல்வியைப் பெற்று தங்களது அரச நியமனத்தைப் பெற்று ஆசிரியப் பணிக்கு வந்தவர்கள் அதிக விடுமுறை எடுத்து பாடத்திட்டங்களை உரிய முறையில் முடிக்காமல் தமது கடமையை ஒழுங்காகச் செய்யாமல் கடமை தவறி விடுகின்றனர். எப்போதும் தாம் பெறுகின்ற ஊதியத்தில் கண்ணாயிருப்பதால் அரசும் இவர்கள் மீதான நம்பிக்கையை இழந்துள்ளது.

இவர்களுக்கு மத்தியில் நல்லுள்ளம் கொண்ட, மாணவர்-பெற்றோர்-சமூகத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பளிக்கப் படும் ஆசிரியர்களும் உள்ளனர். இவர்களைப் போல ஏனைய ஆசிரியர்களும் அனைவரது நம்பிக்கையையும் வென்றெடுக்க வேண்டும். இழந்த நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும்.

அகரம்: ஆசிரியர் - மாணவர் உறவு எவ்வாறு அமைய வேண்டும்?

எம்.எச்.எம். ஹஸன்: குரு-சிஷ்ய உறவு முறை அன்று காணப்பட்டது. அத்தகைய முறைதான் இன்றும் காணப்பட வேண்டும் என்று நாம் கூற வில்லை. அந்த முறை இன்று மாற்றம் அடைந்து விட்டது. இன்று ஆசிரியர்-மாணவர்களுக்கு இடையில் நல்ல உறவுகள் காணப்படுகின்றன. ஆனாலும் சிலபோது அத்தகைய உறவுகள் மித மிஞ்சிப் போய்விடுவதும் உண்டு. இது விரும்பத் தக்கதன்று. ஆசிரியர்கள் மாணவர்களோடு அன்பைப் பரிமாறும் பெற்றோராக, நண்பர்களாக நடந்து கொள்ள வேண்டும். அதேவேளை அறிவூட்டும் பணிபுரியும் அவர்கள் குறிப்பிட்ட வரையறைகளையும் பேணிக் கொள்ள வேண்டும். வழிகாட்டும் நல்லாசான்களுக்கு மாணவர்கள் எங்கும் எப்போதும் மதிப்பளிப்பார்கள். மாணவர்களுக்கு அறிவோடு சேர்த்து பண்பாட்டையும் புகட்டுபவர்களாக ஆசிரியர்கள் இருக்க வேண்டும்.

**ஆசிரியர் என்பவர் பாடசாலையில் மாத்திரம் ஆசிரியரல்ல. அவர் எப்போதுமே ஆசிரியர்தான். பாடசாலையிலும் சரி, பாடசாலைக்கு வெளியிலும் சரி எங்கும் ஆசிரியராகவே கருதப்படுவார். ஆசிரியருக்கான பண்புகள் அவரிடத்தில் மிகைத்துக் காணப்படும். கண்ணியமும் கடமையுணர்வும் கட்டுப்பாடும் கனிவும் நிறைந்தவராக, மற்றோருக்கு முன்மாதிரியாக அவர் திகழ்வார்.**

அகரம்: பாடசாலைக்கு வெளியே ஆசிரியர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

எம்.எச்.எம். ஹஸன்: ஆசிரியர் என்பவர் பாடசாலையில் மாத்திரம் ஆசிரியரல்ல. அவர் எப்போதுமே ஆசிரியர்தான். பாடசாலையிலும் சரி, பாடசாலைக்கு வெளியிலும் சரி எங்கும் ஆசிரியராகவே கருதப்படுவார். ஆசிரியருக்கான பண்புகள் அவரிடத்தில் மிகைத்துக் காணப்படும். கண்ணியமும் கடமையுணர்வும் கட்டுப்பாடும் கனிவும் நிறைந்தவராக, மற்றோருக்கு முன்மாதிரியாக அவர் திகழ்வார்.

அவரது வாழ்க்கையை பிறர் பார்க்கும்போது அவருக்கு கண்ணியமளிக்க வேண்டும் எனத் தோன்றும். அவரது முழு வாழ்க்கையும் இவ்வாறு அமைவதால் பாடசாலைக்கு உள்ளே-வெளியே என்ற வேறுபாடின்றி அவரது வாழ்க்கை முன்மாதிரியானதாக அமைந்திருக்கும்.

பாடசாலையில் கற்பித்தல் பணி புரியும் ஆசிரியர் பாடசாலைக்கு வெளியே தனது கடமை முடிந்து விட்டதாகக் கருத மாட்டார். பாடசாலைக்கு வெளியே உள்ள தனது கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவார். எனவே, மாணவர் சமூகம் கல்வியறிவு மாத்திரமன்றி பல விடயங்களை கற்று பயிற்றப்பட்ட நல்ல சமூகமாக மிளிர வழி வகுப்பார். சமூகம் எதிர்பார்க்கும் விழுமியங்கள் அவரிடம் நிறைந்து காணப்படும். இத்தகைய ஆசிரியர்களுக்கு பாடசாலையில் மாத்திரமன்றி பாடசாலைக்கு வெளியில் மாணவர்கள், பொது மக்களிடத்தில் மதிப்பும் மரியாதையும் காணப்படும்.

அகரம்: ஆசிரியர்களிடமிருந்து மாணவர்கள் எத்தகைய முன்மாதிரிகளை எதிர்பார்க்கின்றனர்?

எம்.எச்.எம். ஹஸன்: ஒழுங்காகக் கற்பிக்கும் ஆசிரியரை எந்த மாணவரும் வெறுப்பதில்லை. மாறாக அவருக்குக் கட்டுப்படுவர்; அவரைச் சூழ எப்போதும் ஒரு கூட்டம் அலைமோதும். பாடத்திற்கு சிறந்த முறையில் தயாராகி, மாணவர்கள் விளங்கும் விதமாக இதமாகக் கற்பிக்கும் ஆசிரியர் நல்ல சமுதாயம் உருவாகக் காரணமாகின்றார். எனவே, ஒழுங்காகக் கற்பிக்கின்ற போது அவர்களை தமது முன்மாதிரிகளாகக் கொள்வதற்கு மாணவர்கள் விரும்புகின்றனர். அவர்களது முன்மாதிரியான செயற்பாடுகள் தாக்கம் மிக்கவை.

அடுத்தது, பாடசாலைக்கும் பாடத்திற்கும் உரிய நேரத்திற்கு சமுகமளிக்கின்ற ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல முன்மாதிரிகள். இவர்களிடமிருந்து மாண வர்கள் உரிய நேரத்திற்கு உரிய காரியத்தை செய்வ தற்குக் கற்றுக் கொள்கின்றனர்.

மாணவர் நலனில் அக்கறை செலுத்தும்போது அந்த ஆசிரியரின் செயற்பாடுகள் மாணவர்களுக்கு சிறந்த முன்மாதிரியாக அமைகின்றன. மாண வர்கள் மீது எவ்வித அக்கறையும் செலுத்தாத ஆசிரியர்களுடனான மாணவர் உறவு விரிசலான தாகவே அமைந்து விடுகின்றது.

வழிகாட்டல் என்பது மற்றொரு முன்மாதிரி. நல்ல விடயங்களைக் கற்றுக் கொடுப்பதும் நல்ல விடயங்களுக்கு வழிகாட்டுவதும் ஆசிரியப் பணியே. பாடசாலை கல்விச் செயற்பாடுகளில் மாத்திரமன்றி பாடப் புறச் செயற்பாடுகளிலும் மாணவர்களுக்கு வழிகாட்டும் ஆசான் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்வார் என்பதில் ஐயமில்லை.

அகரம்: ஆசிரியர் தினத்தில் மாத்திரமன்றி பொதுவாக எந்நாளும் மாணவர்கள் ஆசிரியர்களை எவ்வாறு கௌரவிக்க வேண்டும்?

எம்.எச்.எம். ஹஸன்: கௌரவம் உள்ளத்தி லிருந்து வர வேண்டும். மரியாதை என்பது பண்பு நலன். மாணவர்களுக்கு இயல்பாகவே ஆசிரியர்கள் மீது அன்பும் மரியாதையும் பணிவும் கௌரவமும் வர வேண்டும். நான் ஏலவே கூறியது போல குறித்த தினத்தில் மாத்திரமன்றி எந்நாளும் எந்நேரமும் ஆசிரியர்கள் பற்றிய மதிப்பும் மரியாதையும் மனதில் நிறைந்திருக்க வேண்டும்.

முதலில் இதற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும். கற்கும் இடம், கற்பிக்கும் ஆசிரியர்கள் என்பன மரியாதையுடன் நோக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் மீது மரியாதை வரச் செய்வது அவர்களது பொறுப்பு. அவர்கள் கற்பிக்கும் விதம், மாணவர்களுடன் நடந்து கொள்ளும் முறை, மாணவர் நலனில் அக்கறை காட்டும் அளவு, கற்பிப்பது மாத்திரமன்றி மாணவர்களைப் பயிற்று விக்கும் பாங்கு என்பன மரியாதைப் பண்பை அவர்களுக்குக் கற்பிக்கும்.

அகரம்: உங்கள் வாழ்வில் மறக்க முடியாத ஆசிரியர்?

எம்.எச்.எம். ஹஸன்: நான் படித்தது தமிழ் மொழி மூலமான முஸ்லிம் பாடசாலையில். எனவே, எமக்கு சிங்கள மொழியைக் கற்பதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவு. ஆனாலும், குறைந்த வாய்ப்புகளுக்குள்ளும் எனக்கு நிறைவான வழிகாட்டலை வழங்கியவர் அஸீஸ் ஆசிரியர். அவர் சில சிங்கள நாவல்களையும் புத்தகங்களையும் வாங்கி வாசிப்பவர். அவர் வகுப்பில் பாடங்கள் நடைபெறாதபோது என்னை அழைத்து என்னிடம் சிறிய சிங்கள கதைப் புத்தகங்களைத் தருவார். நான் "இதனை எவ்வாறு வாசிப்பது?" என்று கேட்பேன். "உன்னால் முடியும் நீ வாசி" என்று சொல்வார்.

கௌரவம் உள்ளத்திலிருந்து வர வேண்டும். மரியாதை என்பது பண்பு நலன். மாணவர்களுக்கு இயல்பாகவே ஆசிரியர்கள் மீது அன்பும் மரியாதையும் பணிவும் கௌரவமும் வர வேண்டும். நான் ஏலவே கூறியது போல குறித்த தினத்தில் மாத்திரமன்றி எந்நாளும் எந்நேரமும் ஆசிரியர்கள் பற்றிய மதிப்பும் மரியாதையும் மனதில் நிறைந்திருக்க வேண்டும்.

நானும் அதனை வாங்கிக் கொள்வேன். பின்னர் என்னைக் காணும்போது "வாசித்து முடித்து விட்டாயா?" என விசாரிப்பார். நானும் வாசித்து முடித்து அந்தப் புத்தகத்தைக் கொடுத்ததும் மற்று மொரு புத்தகத்தைத் தருவார். இதனால் எனது சிங்கள மொழியறிவு விருத்தியடைந்தது. அஸீஸ் ஆசிரியர் என் வாழ்வில் மறக்க முடியாத மனிதர். இன்று நான் ஒரு சிங்கள சஞ்சிகையின் (ப்ரபோதய) ஆசிரியராக இருக்கிறேன்.

அதேபோல ஆசிரியர் சிவநேச ராசா எனது கட்டுரையொன்றை வாசித்து விட்டு என்னை ஊக்குவித்தார். "உன்னால் முடியும். நீ எழுது" என என்னை உற்சாகப்படுத்தினார். நானும் எழுதினேன். இப்படியாக எனது கட்டுரை, சிறுகதை, கவியாற் றலை வளர்த்துவிட்டவர்களில் சிவநேச ராசாவும் ஒருவர். இவர்களைப் போல என் வாழ்வில் என்றும் மறவா நல்லாசான்கள் ஏராளம் பேர் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஸ்ஹர் ஸகரிய்யா



இன்றைய அரபு இஸ்லாமிய உலகில் அதிகம் பேசப் படும் ஒரு மனிதரே 2001ஆம் ஆண்டில் மரணித்த முஹம்மத் இப்னு ஸாலிஹ் உஸைமீன் (ரஹிமஹுல் லாஹ்) ஆவார். கற்பதற்கு மாட மாளிகைகள், குளிரூட் டப்பட்ட அறைகள், சொகுசுக் கதிரைகள், பாரிய நூலகங்கள் என்பவற்றை எதிர்பார்க்கும் இன்றைய

# முஹம்மத் இப்னு ஸாலிஹ் உஸைமீன்

உலகிற்கு, எளிமையில் கற்றும் சிறந்த அறிஞ ராக முடியும் என்பதை நிரூபித்து விட்டுச் சென்ற ஒருவரது வாழ்க்கை நிச்சயமாக எமக் கெல்லாம் சிறந்த முன்மாதிரியாக அமையும்.

1929 இல் ஸஊதி அரேபியாவின் கஸீம் எனும் நகரில் நாளாந்த வருமானத்திற்காக வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த ஒருவருக்கு மகனாகப் பிறந்தவரே ஷெய்க் உஸைமீன் அவர்கள். அவரது குடும்பத்தில் வசதிகள் குறைந்திருந்த போதிலும் இஸ்லாமிய சூழல் தாராளமாகவே காணப்பட்டது.

தனது பாட்டனிடம் அல்குர்ஆன் பாடங் களைப் பயின்ற அவர், சிறு வயதிலேயே அல் குர்ஆனை மனனம் செய்து முடித்தார். பிறகு இஸ்லாமிய சட்டம், ஹதீஸ் என்பவற்றை அப்துர் ரஹ்மான் நாஸிர் ஸஃதி எனும் ஆசிரியரிடம் கற்றார். சிறு வயதிலேயே அதிகமான ஹதீஸ்களையும் இஸ்லாமிய சட்டக்கலையில் முன்னைய இமாம்களது கருத்துக்களையும் மனனம் செய்து கொண் டார். பின்னர் ரியாத் நகரில் மஃஹத் அல் இல்மி எனும் பெயரில் இஸ்லாமிய கற்கை களுக்கான ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட போது அதில் இணைந்து 2 வருடம் மேற்படிப்பைத் தொடர்ந்தார்.

இக்காலப் பிரிவில் முக்கியமான பல ஆசிரியர்களுடன் அவருக்கு தொடர்பேற்பட்டது. ஸஊதி அரேபியாவின் தலைசிறந்த அறிஞர் இப்னு பாஸ் இவரின் அன்பிற் குரிய ஆசிரியர்களுள் ஒருவர். இமாம் இப்னு தைமி யாவின் சிந்தனைகளால் ஆகர்ஷிக்கப்பட்ட ஷெய்க் பின் பாஸ், அதே ஒழுங்கில் ஷெய்க் உஸைமீன் அவர் களையும் வளர்த்தெடுத்தார்.

மஃஹத் அல்இல்மியிலிருந்து அவர் பட்டம் பெற்று வெளியேறிய பின்னர் அதே கலாபீடத்தில் ஆசிரியராகப் பணிக்கு அமர்த்தப்பட்டார். தனது இறுதிக் காலப் பிரிவில் மலிக் ஸுஊத் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்ட ஒழுங்கமைப்பு குழுவின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். ரமழான், ஹஜ், கோடை விடுமுறை போன்ற காலங்களில் அவர் புனித ஹரம் ஷரீபிலும் (மக்கா) மஸ்ஜிதுன் நபவியிலும் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். ஸஊதி அரேபியாவின் மூதறிஞர்கள் அமைப்பின் பிரதான உறுப்பினராக மரணிக்கும் வரை தொடர்ந்திருந்தார்.

90க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள அவர் ஸஊதி அரசின் முதன்மை அறிஞர்களுள் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1993 இல் அவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய சேவைகளுக்கான பைஸல் விருதைப் பெற்றுக் கொண்டார். 2001இல் அவரது மரணித் தின் பின்னர் முஹம்மத் இப்னு ஸாலிஹ் உஸைமீன் எனும் அமைப்பு அவரின் நினைவாக உருவாக் கப்பட்டது. அதே காலப்பிரிவிலேயே இவரின் பெயரில் ஓர் இணையதளம் ஆரம்பிக்கப்பட்டது. இஸ்லாமிய சட்டம், நம்பிக்கைக் கோட்பாடுகள், ஹதீஸ் போன்ற துறைகளில் அவர் தான் வாழும் காலத்திலும் வாழ்ந்த பின்னரும் விற்பன்னராக இருந்திருப்பதை அவரது நூல்களை வாசிக்கின்ற எவரும் புரிந்து கொள்வர்.

அவர் இயல்பிலேயே புகழ்ச்சியை விரும்பாத வராகவும் புகழ்ச்சிக்கு அடிபணியாதவராகவும் இருந்தார். அப்படி தன்னைப் பற்றி யாரேனும் புகழ்வதை செவியுற்றால் தான் அதற்குத் தகுதியற் றவன் என்று கூறி தவிர்ந்து கொள்ளுமாறு கட்டளை இடுவார்.

ஒருமுறை அவரது மாணவர்களுள் ஒருவர் அவரைப் பற்றி ஒரு பாடல் பாட விரும்புவதாகக் கூறி அதற்கு அனுமதி வேண்டினார். அனுமதி கிடைக்கவே அவர் இப்படிப் பாடினார்:

"எனது உம்மத்தே இந்த இரவின் இறுதி
பகலாகவே இருக்கும்

அதன் ஒளிக்கதிர்கள் உலகெங்கும் பரவிவிடும்

நன்மைகளும் வெற்றியும் எதிர்பார்க்கப்பட்ட
ஒன்றே

தீமைகள் அதிகரித்திருந்த போதிலும் சத்தியமே
வெற்றி பெறப் போகின்றது

எம்மீது இறைவன் கொண்ட அருளின்
காரணமாக

களங்கங்கள் மாசுகள் இல்லாத ஒருவர்
கிடைத்துள்ளார்

எமது எழுச்சித் தலைவர் இப்னு ஸாலிஹ்
இருக்கும் காலமெல்லாம்

இந்த வெற்றி எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே."

இக்கவிதையை செவிமடுத்த ஷெய்க் உஸைமின் தனது மாணவரிடம் இக்கவிதையில் உள்ள குறை பாடுகளை சுட்டிக் காட்டினார்.

"இக்கவிதையுடன் நான் உடன்படவில்லை. ஏனெனில் சத்தியத்தை மனிதர்களுடன் இணைத் துக் கூறுவதை நான் விரும்பவில்லை. சத்தியத்தை மனிதர்களுடன் இணைத்துக் கூறினால் மனிதர் களது மறைவுடன் சத்தியமும் மறைந்து விடும். மக்களும் நம்பிக்கை இழந்து விடுவார்கள். எனவே, உமது கவிதையை நீர் இப்படி மாற்றிக் கொள்ளும்: "எமது எழுச்சித் தலைவர் இப்னு ஸாலிஹ் இருக்கும் காலமெல்லாம் என்பதற்கு பதிலாக அல்லாஹ்வின் வேதமும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது ஸுன்னாவும் இருக்கும் காலமெல்லாம் என்று மாற்றிக் கொள் ளும். இதுவே சரியானது."

உடனே மாணவர் அதனை மாற்றி இப்படிப் பாட முற்பட்டார்:

**"அல்லாஹ்வின் வேதமும் அவனது தூதரின் முன்மாதிரியாக ஷெய்க் உஸைமீனும் இருக்கும் காலமெல்லாம்..."**

"நிறுத்து நிறுத்து. அல்லாஹ்வே உமக்கு வழிகாட்டப் போதுமானவன்."

பின்னர் ஏனைய மாணவர்களை விழித்து "இதற்குப் பிறகு உங்களில் எவரும் சத்தியத்தை மனிதர்களுடன் இணைத்துப் பேசுகின்றவர்கள் இங்கு இருக்கக் கூடாது. ஏனெனில் மனிதர்கள் வழிகெட்டு விட முடியும்" என்று கூறிவிட்டு இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களது கருத்தொன்றை நினைவுபடுத்தினார்கள்:

"எவரொருவர் மற்றொருவரது முன்மாதிரியைப் பின்பற்ற விரும்பினால் மரணித்த ஒருவரது முன்மாதிரியைப் பின்பற்றட்டும். ஏனெனில், உயிரோடு இருப்பவரை முன்மாதிரியாகக் கொண்டால் குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. சத்தியத்தை மனிதர்களுடன் இணைத்து நோக்கு வதன் மூலம் பிழையான நெறிமுறைகளின் பக்கம் வழிகாட்டப்பட்டு வழிகெடும் சாத்தியக்கூறுகள் உள்ளன."

இத்தகைய நற்குணங்கள் நிறைந்த ஓர் அறிஞரது வாழ்க்கை முழுவதும் எமக்கான சிறந்த முன் மாதிரிகள் என்பதில் சந்தேகம் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைச் சரம்

# வாழ்க்கை



வாழ்க்கை என்பது வட்டம்
அவ்வட்டத்தில் எத்தனை குற்றம்
இன்பம் துன்பம் மாறிவருவது நித்தம்
வாழ்வில் எத்தனை மாற்றம்!

சுவர்க்கத்தை நாடி நன்மைகள் செய்வோம்
இவ்வுலகில் வாழ்வை செம்மை செய்வோம்
ரப்பே! யா ரப்பே என்று வேண்டி
புனிதமாக்குவோம்
எம் பயணத்தை...

*அஸ்கா அமான்*
*தரம்: 10, அல்கஸ்ஸாலி ம.க.*
*அடுலுகம*

# தாயின் பாதத்தின் கீழ் சுவர்க்கம்



முட்டை உடைக்கும் குஞ்சு
மெல்லப் புது உலகை
மூச்சில் இழுக்கும்போதும்...

கன்றின் குரலை காணாது - பசு
கத்திக் கதறும் போதும்...
பசியை தானே தின்று அப் பசு-தன்
கன்றுக்கு பாலை வார்க்கும்போதும்...
நினைவில் வர வேண்டும்
வேதம் கூறிடும் மார்க்கம் அதுதான்
தாயின் காலடியில் புலப்படும் சொர்க்கம்

*எச்.எப். நிரோஷா*
*தரம்: 09, தி/அல்தாரிக் மகா வித்தியாலயம்*
*கந்தளாய்*

# கல்வி


*றிஸ்னா றபாய்தீன்*

தேடிப் பெறவேண்டிய சித்து
தேடி வைத்துப் பார்க்கும்போது முத்து
கோடி இன்பம் தந்துவிடும் வித்து
அதுவே கல்வி எனும் பொதுச் சொத்து

புத்தகத்தில் இருக்கும்போது எழுத்து
தத்துவமாய் வாய் சொல்லும்போது கருத்து
அதைப் பயன்படுத்துவது
உன்னைப் பொறுத்து
கல்வியே உண்மைச் செல்வமென
உன் மனதில் நிறுத்து
ஆசானைப் பேசாதே மறுத்து
நாளை உன் பெயருக்கு பொன் எழுத்து

கல்வி என்பது மூன்றெழுத்து
இளமைக் கல்வி சிலை எழுத்து
கல்வியில் உன்னை முழுமையாக
ஈடுபடுத்து
அதனால் நீ பெறுவாய் உயர் அந்தஸ்து

# நாளைய விடியலில்...



இன்றைய நாளை திருப்தி கொள்
நாளை வரும் முன்
சென்றடையலாம்
இலக்கை
மாலையும் இருட்டும்
பகல் வரும் வரைதான்
பொறுமை வேண்டும்
எதிர்பார்க்கும் இலக்கை அடைய
பகல் வந்தால் இருட்டும்
பதுங்கும் -எல்லாம் துலங்கும்
முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்

*எம் என்.எப். பாயிதா, முருதலாவ*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்


# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்




**வினாப்பத்திரம் I** — **நேரம் 45 நிமிடம்**



பின்வரும் படங்களுக்கு உரிய மிகப் பொருத்த மான விடைக்கு கோடிடுக.


1. 
i. இதில் நீர் வைக்கலாம்
ii. இது ஒரு குடம்
iii. இது உடையாது


2. 
i. இயற்கை ஒளிமுதல்
ii. தெற்கில் மறையக் கூடியது
iii. செயற்கை ஒளிமுதல்

3. 
i. சமைத்து மட்டும் சாப்பிடலாம்
ii. பழுத்த பின் சாப்பிடலாம்
iii. பச்சையாகவும் சமைத்தும் சாப்பிடலாம்

முதல் படத்துடன் மிகவும் தொடர்பு கொண்ட படத்திற்கு கோடிடுக.

4.   i  ii  iii

5.   i  ii  iii

6.   i  ii  iii

பின்வரும் கூற்றுகளுக்கு பொருத்தமான விடைக்குக் கோடிடுக.

7. சிறுவர்கள் கடற்கரையில் பட்டம் விடுவர்.
i. பெற்றோரின் தொல்லையில் இருந்து தவிர்ந்து கொள்ள.
ii. பட்டம் விடுவதற்கான வளி அங்கே உள்ள தால்.
iii. கடற்கரையில் மட்டும்தான் பட்டம் விட வேண்டும் என்பதனால்.

8. ஒருவர் கையில் குடையை எடுத்துச் செல்கிறார்.
i. பனிப்பொழிவு ஏற்படும் என்ற ஐயத்தில்
ii. தனக்கு தடிமன் ஏற்படும் என்ற பயத்தில்
iii. மழை வரலாம் என்ற ஐயத்தில்

சரியான விடைக்குக் கோடிடுக.

9. நிலல், நிழல், எனல்
10. நச்சத்திரம், நற்சத்திரம், நட்சத்திரம்
11. பசுக்கன்று, பசுக்கண்டு, பசுக்கன்டு

பின்வரும் சிங்கள சொற்களுக்கான கருத்தை எழுதுக.

12. தரு: ........................
13. பார: ........................

மிகச் சரியான எழுத்தை தெரிந்து கோடிடுக.

14. கம்ப ........ (லி, ளி, ழி)
15. புற் .......ரை (ட, த், ற)
16. ஒட்டு ......ர் (ந, ன, ண)
17. தொ ......லாளி (லி, ழி, ளி)
18. க ........ங்குயில் (று, ர், ரு)

பின்வரும் படத்திற்கான ஆங்கிலச் சொல்லை எழுதுக.

19.  ____________________

20.  ____________________

மிகப் பொருத்தமான விடையை எழுதுக.

21. கொடி மூலம் பெறப்படும் பழம் | | | | |
22. துவர்ப்பு சுவை உடையது. | | | |
23. பெற்றோரில் ஒருவர் | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


24. இரவில் வெளிவரும் முலையூட்டிப் பறவை


| | | | |
|---|---|---|---|
| | | | |

25. கடல் என்பதற்கு ஒத்த பதம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |


கீழே தரப்பட்டுள்ள உருவங்களுடன் மிகத் தொடர்புடைய சொற்களை உள்ளடக்கிய விடையின் கீழ் கீறிடுக.

26. 
i. மாமிச உண்ணி, சாதுவானது
ii. தாவர உண்ணி, கவர்ச்சியான கண்
iii. வீடு, தாவர உண்ணி, கறுப்பு

27. 
i. விளையாட்டு, வியாபாரம்
ii. கற்றல், மாணவர், அறிவு
iii. பெற்றோர், ஆசிரியர், விளையாட்டு

முதலில் தரப்பட்டுள்ள உருவிற்காகப் பயன்படுத்தக் கூடிய உருவை எதிரே உள்ள உருக்களிடையே தெரிந்து கோடிடுக.

28. 
i ii iii iv

29. 
i ii iii iv

30. 
i ii iii iv

31. 
i ii iii iv

அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| | பொருட்கள் | அளவு | ஒன்றின் விலை | பணம் |
|---|---|---|---|---|
| | | | ரூபா சதம் | ரூபா சதம் |
| | பென்சில் | 2 | 8. 00 | 16. 00 |
| | பேனை | 3 | 20. 00 | 60. 00 |
| 32. | நிறப் பெட்டி | 5 | 25. 00 | ______ |
| 33. | சித்திரக் கொப்பி | 2 | 30. 00 | ______ |
| 34. | அடி மட்டம் | 3 | 15. 00 | ______ |




35. அருகில் தரப்பட்ட புத்தகத்தை அடுத்த பக்கம் விரிக்கும்போது வலது பக்கத்தில் உள்ள எண் யாதாக இருக்கும்?

36. 424 தோடம்பழங்களை நான்கு பேருக்கு சமனாகப் பங்கிட்டால் ஒருவருக்கு கிடைக்கும் தோடம் பழங்கள் எத்தனை?

37. இப்பொழுது எனது வயது 9. இன்னும் 5 வருடங்களுக்குப் பிறகு என்னுடைய வயது?

38. 100இன் அரைவாசியுடன் 20ஐக் கூட்டினால் வரும் விடை.

அடுத்து வரும் எண்ணை எழுதுக.

39. 1097, 1098, 1099, ..........., ...........

40. 2070, 2080, 2090, ..........., ...........

41. 1025, 1050, 1075, ..........., ...........

42. இலங்கையில் சுவர் ஓவியங்கள் காணப்படும் இடம்
i. சீகிரியா ii. கண்டி iii. கொழும்பு

43. காந்தம் காணப்படும் பொருட்கள் யாவை?
i. வானொலி, ஒலிபெருக்கி
ii. கடிகாரம், திசைகாட்டி
iii. தையல் இயந்திரம், கடிகாரம்

இலக்கமும் அதற்குரிய இரகசியக் குறியீடும் தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 7 | 0 | 8 | 5 |
| A | M | N | T |

44. ரூபா 875.00 இதற்குரிய இரகசியக் குறியீட்டை எழுதுக.

பின்வரும் விளையாட்டுக்களின் பெயர்களை எழுதுக.

45. 
______

46. 
______

47. 
______

48. 
______

49. இலங்கையில் உள்ள கட்டுநாயக்க விமான நிலையம் அமைந்துள்ள மாகாணம் எது?
i. மேல் மாகாணம் ii. கிழக்கு மாகாணம்
iii. வட மாகாணம்

50. இலங்கையில் உள்ள இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள மாகாணம் எது?
i. ஊவா மாகாணம் ii. மேல் மாகாணம்
iii. கிழக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

**வினாப்பத்திரம் II**  **நேரம் 1 மணி 15 நிமிடம்**

சரியான விடைக்குக் கோடிடுக.

ஒரு குளத்தில் ஓர் 1. (ஆமை, ஆந்தை) வாழ்ந்து வந்தது. அதற்கு 2. (பறப்பதற்கு, பரப்பதற்கு) ஆசை வந்தது. அது ஒரு 3. (புறாவை, ஆட்டை) சந்தித்து தனக்கு பறப்பதற்கு 4. (கத்து, கற்று)த் தருமாறு 5. (கூரியது, கூறியது)

பின்வரும் பாடலை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

*(அ) அறிஞர் கூறும் வார்த்தைகள்*
*ஆரம்பத்தில் கசப்பினும்*
*புரிந்து கொண்டு நடக்கையில்*
*அரிய தேனாய் இனிக்குமே*

*(ஆ) தோல்வி அடைய நேரிடில்*
*துவண்டு போகலாகுமோ*
*தோல்விதானே வெற்றியின்*
*தொடக்கப் படிகள் ஆகுமே*

6. வெற்றியின் தொடக்கப் படிகள் எது?
7. மனிதன் எப்போது துவண்டு போகிறான்?
8. கசப்பாகத் தோன்றுவது எது என பாடல் கூறுகிறது?
9. தோல்வி என்பதற்கான எதிர்ப்பதம் யாது?
10. அறுசுவைகளுள் இரண்டு 'அ' பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை யாவை?


i. ........................ ii. ........................

பின்வரும் சிங்கள வசனத்திற்கான கருத்தை எழுதுக.

11. தாத்தா கோ? ....................
12. ஹரி யன்ன. ....................

பின்வருவனவற்றில் பணப்பெறுமதியில் கூடியது.

13. 

14. 

வாக்கியங்களை ஒழுங்கமைக்குக.

15. கடமை, பெற்றோரை, எமது, பேணல்

.............................................................

16. போல, யானை, சொல்லும், பிளிறும், பல்லி

.............................................................

பின்வரும் வசனத்திற்கு பொருத்தமான விடைக்குக் கோடிடுக.

17. வெய்யிலின் (தீமை, அகோரம்) தாங்க முடியாது போனது.
18. சேர் ஐசக் நியூற்றன் (அகங்காரம், ஓங்காரம், ரீங்காரம்) இல்லா சிறுவன்.
19. கடவுளை நம்பினோர் (இன்பம், நன்மை, துன்பம்) அடைவதில்லை.
20. அரசனின் (போதனைப்படி, சாதனைப்படி, ஆணைப்படி) சேவகர்கள் நடந்து கொண்டனர்.

பின்வரும் ஆங்கில வசனத்திற்கான விடையை எழுதுக.

21. Small Tree ........................
22. Blue Sky ........................

பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்தை தருக.

23. இரவு .............
24. கீழ் .............
25. முற்பகல் .............

படத்திற்குப் பொருத்தமான விடையைக் கண்டுபிடித்து அதன் கீழ் கீறிடுக.

26. 

i. தரையில் படரும் கொடி
ii. இது செடியை சார்ந்தது
iii. பந்தலில் படரும் கொடி


27. 

i. மாமிச உண்ணியாகும்
ii. தாவர உண்ணியாகும்
iii. அனைத்தும் உண்ணியாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மிக நெருங்கிய தொடர்புடைய இரு உருக்களை இணைக்கும் விடையின் கீழ் கோடிடுக.

28.




i. D,E    ii. A,D    iii. B,C

29.




i. DEயும் ACயும்    ii. DEயும் CDயும்


iii. BCயும் ACயும்

30. எமது நாட்டுக்குரிய விலங்கு அல்லாதது எது?

i. யானை    iii. சருகு மான்

iii. காட்டுச் சேவல்

31. பனிக்கட்டியொன்றை நீரில் இட்டால் அதனைக் காட்டும் சரியான படம் எது?




32. பழத்தினுள்ளே அனேக வித்துக்களைக் கொண்ட பழம் எது?

i. கத்தரிக்காய்    ii. மாதுளம் பழம்

iii. அப்பிள் பழம்

33. மனிதனுக்கு தீங்கு செய்யும் பிராணிகள் யாவை?

i. குளவி, தேனி    ii பாம்பு, பூனை

iii. மாடு, ஆடு

34. வெற்றிலையைப் போன்ற வடிவமுடைய தாவரம் எது?

i. ஆமணக்கு    ii. மிளகு    iii. பலா

35. குருநாகல் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளது?

i. மேல் மாகாணம்    ii. வடமேல் மாகாணம்

iii. தென் மாகாணம்

36. தொலைக்காட்சி பார்ப்பதனால் ஏற்படும் பாதகங்கள்.

i. நேரம் வீண் விரயமாகும், வாசிப்பதில் ஆர்வம் குறையும்.

ii. கல்வி நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம்.

iii. செய்திகளைக் கேட்கலாம்.

37. தொலைக்காட்சி பார்ப்பதால் கிடைக்கும் அனுகூலங்கள்.

i. பல்வேறு தகவல்களை கேட்கவும் பார்க்கவும் வாய்ப்பு கிடைக்கும்.

ii. நேரம் விரயமாகுதல்.

iii. தொலைக்காட்சிக்கு அடிமைப்படல்.

38. மான், ஆடு, மாடு போன்ற மிருகங்கள் நீரை எவ்வாறு பருகுகின்றன?

i. நாக்கினால் நக்கி    ii. வாயால் உறிஞ்சி

iii. கூற முடியாது

39. மரங்களின் வித்துக்களை தூர இடங்களுக்கு கொண்டு செல்லும் பிராணி எது?

i. அணில்    ii. காகம்    iii. வௌவால்

40. உணவு தயாரிக்கப் பயன்படும் வித்துகள் யாவை?

i. நெல், குரக்கன்    ii. கோப்பி, கடலை

iii. தேயிலை, பயறு

41. பின்வரும் பூக்களில் தேனைக் கொண்டிராத பூ எது?

i. வாழைப்பூ    ii. காகிதப்பூ

iii. முருங்கைப்பூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்காணும் ஒவ்வோர் இலக்கத்துக்கும் சமமான குறியீடுகள் காட்டப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

✳ = 6    ⊛ = 4    ○ = 3

**42.** ✳ ⊛ +
⊛ ○
______

i. *107*
ii. *97*
iii. *117*


**43.** ○ ⊛ + ✳ ○ = ..........

i. *668*    ii. *677*    iii. *607*


**44.** ✳ ⊛ -
○ ○
______

i. *31*
ii. *41*
iii. *21*

**பென்சில்களின் நீளத்தைக் காண்க.**

**45.**


_____cm

**46.**


_____cm

**கூட்டுக.**

**47.**

| kg | g |
|---|---|
| 10 | 450 + |
| 9 | 550 |

**48.**

| kg | g |
|---|---|
| 7 | 300 + |
| 3 | 650 |

**49.**

| kg | g |
|---|---|
| 10 | 750 + |
| 12 | 250 |

**கழிக்குக.**

**50.**

| kg | g |
|---|---|
| 5 | 100 - |
| 9 | 600 |

**51.**

| kg | g |
|---|---|
| 10 | 050 - |
| 9 | 400 |

**52.**

| kg | g |
|---|---|
| 7 | 150 - |
| 2 | 500 |

பின்வரும் பிராணிகளின் கால்கள் படத்தில் தரப்பட்டுள்ளன. அவற்றை இனங்கண்டு எழுதுக.


**(கழுகு, கோழி, காகம், வாத்து, கிளி, புறா)**




**53.** ......................



**54.** ......................



**55.** ......................



**56.** ......................

பின்வரும் சொற்களை இறந்த கால சொற்களாக்குக.

**57.** கூவும் ......................

**58.** நடிக்கின்றான் ......................

**59.** எனது வீட்டுத் தோட்டம் என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது ஐந்து சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

## தவறுக்கு வருந்துகிறோம்

கடந்த அகரம் இதழில், அகரம் ஆளுமை எனும் பகுதியில் வெளியான அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு பாஸ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் பற்றிய கட்டுரையில் அவரின் படத்திற்குப் பதிலாக ஸஊதி அரேபியாவின் தற்போதைய ஷெய்க்கான அப்துல் அஸீஸ் இப்னு அப்துல்லாஹ் அவர்களின் புகைப்படம் பிரசுரிக்கப்பட்டிருந்தது என்பதை அறியத் தருகிறோம்.



அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் இப்னு அப்துல்லாஹ்



அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு பாஸ் (ரஹிமஹுல்லாஹ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## துறைசார் நிபுணத்துவம்

# தொலைதூரம் பயணிக்க வைக்கும்

**உங்களுடைய** கல்வி அல்லது தொழிற் துறையில் நீங்கள் ஹீரோவாக இருக்க வேண்டும். அந் தளவுக்கு அத்துறைசார் அறிவு, ஆற்றல் என்பன மிகைக்கப் பெற்றவராக நீங்கள் இருக்க வேண்டும். குறிப்பிட்ட துறையில் நீங்கள் நிபுணராகத் திகழ அறிவு, ஆற்றல், மனப்பாங்கு ஆகிய மூன்றும் அவசியம்.

தினமும் உங்கள் அறிவைப் பெருக்கிக் கொண்டே இருங்கள். உங்கள் துறை சார்ந்த அறிவை நீங்கள் பெறாதபோது நீங்கள் தோல்வியடைந்து விடுவீர்கள். பலர் இந்த அறிவை அனுபவத்தின் மூலம் பெறுகின்றனர். துறைசார்ந்த விஷேட அறிவைப் பெறுவதற்கு சாதனையாளர்கள் ஒருபோதும் பின்னிற்பதில்லை. வாழ்க்கையில் வெற்றிபெற விரும்பாதவர்தான் பாடசாலைக் கல்வி முடிந்ததோடு கற்கும் பணி நிறைவடைந்துவிட்டது என தப்புக்கணக்குப் போடுகின்றார். நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான அறிவைப் பெறுவதற்கு தவறுபவராகவே அவரைக் கருத வேண்டும்.

கல்வியை நிறுத்துவதற்கும் அறிவை விருத்தி செய்யாமலிருப்பதற்கும் பலரும் சொல்லும் பல சாக்குப்போக்குகள் உள்ளன. மாணவர்கள், "எனக்கென்றால் அந்தப் பாடம் ஏறுவதில்லை..." "எனக்கு அந்தப் பாடத்தில் விருப்பமில்லை..." போன்ற சாட்டுக்களை சொல்ல, பாடசாலைக் கல்வியை முடித்தவர்களோ, "நான் குடும்பத்தைக் கவனிக்க வேண்டும்" "எனக்கு படிக்க முடியாது" "எனது பொருளாதாரம் எனக்கு படிக்க இடம் தராது" போன்ற பல்வேறு நொண்டிச் சாட்டுக்களைச் சொல்வர். எந்தச் சாட்டும் சொல்லாமல் தனது துறையைத் தெரிவு செய்து வாழ்வில் வென்ற ஒருவரது சரிதை இது.

ஸ்டார்ட் ஒஸ்டின் என்பவர் கட்டுமான என்ஜினியராக வாழ்க்கையை ஆரம்பித்தார். ஆனால் எதிர்பார்த்தளவு சம்பாதிக்க முடியவில்லை. தொழிலை மாற்ற முடிவு செய்தார். சட்டம் படிக்க ஆரம்பித்தார். அதுவும் திருமணம் முடித்து 40 வயதுக்குப் பிறகுதான். ஏனையவர்கள் 04 வருடத்தில் படித்து முடிப்பதை 02 வருடங்களில் கற்றுத் தேர்ந்தார். விஷேட பயிற்சித் திட்டத்தில் சேர்ந்தார். தொழில் துறை வக்கீலாக மாறினார்.

அதேபோல் 40 வயதுக்குப் பின்பும் தொடர் தோல்விகளை சந்தித்த ஆப்ரஹாம் லிங்கன் தனது துறையை விட்டு ஒதுங்கிவிடவில்லை. தனக்கு விருப்பமான துறையில் விடாப்பிடியாக இருந்தார். தோல்விக்கு மேல் வந்த தோல்விகளை துரத்தி வெற்றிப் படிகளில் பயணித்தார்.

உங்களுக்குப் பொருத்தமான துறையைத் தெரிவு செய்வதும் அதில் துறைசார் வல்லுனராக மாற முனைவதும் உங்கள் வாழ்வின் வெற்றிக்குத் துணை செய்யும். மாறாக, ஏதோ ஒரு துறையில் ஏதோ ஒன்றைப் படித்து ஏதோ ஒரு தொழிலைச் செய்வது உங்களை தோல்வியடையச் செய்து விடும்.

உங்கள் மனதிற்குப் பிடித்த துறையைத் தெரிவு செய்து உங்கள் உயர்கல்வியைத் தொடங்குங்கள்; தொடருங்கள். உங்கள் இலக்கை அடையும் வரை ஓய்ந்து விட வேண்டாம். சிலபோது நீங்கள் தெரிவு செய்த துறை உங்களுக்கு உரியதல்ல என்று அறிந்தால் அதிலிருந்து மாறி உங்களுக்கு உரிய துறையைத் தெரிவு செய்வதற்குத் தயங்க வேண்டாம்.

இன்றைய உலகிற்கு துறைசார் நிபுணர்கள் தேவைப்படுகின்றனர். அந்த இடைவெளியை நிரப்ப வேண்டிய பெரும் பொறுப்பு உங்களுக்கு உள்ளது. எனவே, உங்கள் அறிவு, ஆற்றல் என்பவற்றை விருத்தி செய்வதோடு பிறரது அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையான அறிவைத் தேடிப் பெறுங்கள். தேவையற்றவை உங்கள் மூளையில் திணிக்கப்படுவதால் சிலபோது நீங்கள் கற்றலில் சோர்ந்திருக்கலாம். ஆனால், உங்களுக்கு விருப்பமான விடயத்தை ஆர்வத்துடன் தேடிப் படிக்கும்போது உங்களுக்கு நேரம் போவதே தெரியாமலிருக்கும். தடைகளைத் தகர்த்தெறியுங்கள்; தன்னம்பிக்கையோடு முன்னேறுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

## அல்ஹிதாயா மு.வி. கொழும்பு - 10



ஏ.ஐ.எப். இல்மா (156)



ஏ.எச். அப்துல்லாஹ் (162)



எம்.எச்.எம். அஸ்மா (162)

## கொடபிடிய ஸாதாத் ம.வி, கொடபிடிய, அகுறஸ்ஸ

## அறபா தேசிய பாடசாலை, வெலிகம



எம்.ஏ. ஆதில் அஹ்மத் (171)
எம்.அஜ்மல் - எம்.எப். மஸீதா



எப்.என். நிஷ்பா (151)
எம்.ஸீ.எப். நிபாத்-
எம்.பீ.எஸ். நுவைரா



எம்.ஐ.எம். இர்ஷாத் (149)
எம்.பீ.எம். இப்ஹாம் -
ஏ.ஆர்.எம். மனீஹா


www.aharam.lk


facebook இல் Like செய்யுங்கள்... www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# JMF இன் வெளியீடுகள்




அல்ஹஸனாத் (1970 இலிருந்து...)
www.alhasanath.lk




பிரபோதய (1984 இலிருந்து...)




எங்கள் தேசம் (2002 இலிருந்து...)




அகரம் (2005 இலிருந்து...)
www.aharam.lk




The Trend (From 2011)
www.thetrend.lk

**JMF**
Just Media Foundation
77, Dematagoda Road,
Colombo 00900,
Sri Lanka.
Tel: 0094112689324
Fax: 0094112686030
E mail: jmflanka@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org